உ

சிவமயம்

# திருக்கோணமலை
# அருள்மிகு
# ஸ்ரீ மாதுமையம்பாள் சமேத கோணநாதர்
# ஆலய மணிக்கோபுர
# நூதன பிரதிஷ்டா
# மஹா கும்பாபிஷேக மலர்

## 04.12.1998



University of Jaffna
235.1
THI
189672(AR/PB; Main)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donated to the RAFA library by
T. Anpuvan

235.1
THI

AR

உ
சிவமயம்

ARCHIVES

திருக்கோணமலை

# அருள்மிகு
# ஸ்ரீ மாதுமையம்பாள் சமேத கோணநாதர்
## ஆலய மணிக்கோபுர
## நூதன பிரதிஷ்டா
# மஹா கும்பாபிஷேக மலர்

## 04.12.1998

University of Jaffna
189672
Library

189672

189672
RAFA NA 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சமர்ப்பணம் | | 01 |
| 2. | ஆசிச்செய்திகள் | - ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் | 05 |
| | | - பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் | 06 |
| | | - பிரம்மஸ்ரீ சுவாமி விஸ்வநாதக் குருக்கள் | 07 |
| | | - ஓசை ஒலியெல்லாம் நீயே | 08 |
| | | - சுவாமி செல்லத்துரை | 09 |
| | | - *ஆலய பரிபாலன சபைத் தலைவர்* மு. கோ. செல்வராசா | 10 |
| | | - *திருகோணமலை மாவட்ட பா. உ.* இரா. சம்பந்தன் | 12 |
| | | - Lt. Gen. G. D. G. N. Seneviratne | 13 |
| | | - கோணநாதனின் கோபுர மணியோசை | 14 |
| | | - Brigadier V. B. L. Fernando, RWP. RSP. PSC | 15 |
| | | - I. P. M. A. Edmond Mahendra | 16 |
| | | - Prof. Dr. K. VK. *சிவசுவாமி* | 18 |
| | | - A. Mahendra, U. K. | 19 |
| 3. | திருக்கோணேஸ்வர வரலாறு | | 24 |
| 4. | உயிர்கள் மீது அன்பு கொள் | | 33 |
| 5. | மணிக்கோபுர நிர்மாண சிற்பி... | | 35 |
| 6. | கோணேசர் பஜனை | | 37 |
| 7. | சிவபூமிக்குப் புதிய மணி ஓசை | | 38 |
| 8. | திருக்கோணைநாதர் திருநகர் உலா | | 40 |
| 9. | திருக்கோண நாயகர் ஊஞ்சல் | | 42 |
| 10. | திருக்கோணமலைப் பதிகம் | | 43 |
| 11. | சிந்தித்தோம் சிந்துகின்றோம் ... | | 47 |
| 12. | நன்றியுரை | | 49 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவ சிவ சிவ



# சமர்ப்பணம்

## (முன்னுரை)



*'திருக்கோணநாதர் திருத்தல கண்டாமணி ஓசை*
*துன்பம் அகல, எங்கும் அமைதி, சாந்தி, சமாதானம் நிலவ ஒலிக்கட்டும்'*

திருக்கோணேஸ்வரம் பாடல் பெற்ற தலம். இராவணேஸ்வரன் தொடக்கம் திருவுடையார் பலரால் துதிக்கப்பட்ட தலம். இத்தலத்தின் சிறப்பு குடிதனை நெருக்கி பெருக்கமாகத் தோன்றும் திருக்கோணமலைக்கு பெருமையினைச் சேர்க்கின்றது.

திருக்கோணேசப் பெருமானின் திருவடியில் நிரைத்த வீரக்கழலின் ஒலியும் சிலம்பொலியும் கலந்து ஒலிக்கின்ற இத் திருத்தலத்தில் நீண்ட காலமாக ஒரு கண்டாடமணி இல்லாதது அடியார்கள், அன்பர்கள் மத்தியில் மனக்குறையை ஏற்படுத்திற்று. இக்குறையை நிறைவு செய்ய இறை அருள் கூட்டிற்று. கண்டாமணியினை உருவாக்கி வழங்க லண்டன் மாநகரில் வாழும் அன்பர் திரு. அ. மகேந்திரன் உடன் சேர்ந்து பலரும் முன்வந்தனர். இப்பணி அவர்களால் நிறைவு எய்தப் பெற்றது.

இக்கண்டாமணியை ஏற்றுவதற்கு கோபுரம் ஒன்று அமைப்பது அவசியமாயிற்று. இம்மணி ஆலயத்திற்கு வந்தடைந்து ஆறு மாத காலத்திற்கு மேலாகியது. தனித்தோ, கூட்டாகவோ கோபுரம் அமைக்க எவரும் முன்வரவில்லை. ஆன்மீகத் துறையிலும் வாழ்விலும் ஈடுபடுவோருக்குக் குறிக்கோள் மிக அவசியம். "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று அப்பர் அடிகள் பாடியுள்ளார். இக்கோபுரம் நிருமாணிப்பதற்கான எமது குறிக்கோள் முழுமைபெற எம்பெருமானை வேண்டி இறைஞ்சினோம். கண்டாமணிக் கோபுரம் அமைக்கும் பணிக்கான விடை எமக்குக் கிடைக்கப்பெற்றது. இப்பணியை அடியேம் நாம் ஏற்றுக்கொண்டோம். அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரது முயற்சியின் பயனால் இக்கோபுரமும் இறைவன் திருவுள்ளப்படி ஆக்கப்பெற்றது. இக்கண்டாமணிக் கோபுரத்தின் சிறப்பினையும் கோணநாதனின் அருமை பெருமைகளையும் எடுத்துக்காட்டுகின்றது உங்கள் கையிலுள்ள இம்மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ மாதுமையம்மாள் சமேத கோணநாதர் ஆலய கண்டாமணிக் கோபுர நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக மலர் வெளியிடுவதற்கு எமது பணிவான வேண்டுகோளை திருவுள்ளங்கொண்டு ஏற்று ஆசிச்செய்திகளையும், வாழ்த்துக்களையும், தலச்சிறப்பு வரலாற்றினையும் அருள் அன்பர்கள், மதிப்புக்குரியவர்கள் பலர் தந்துள்ளனர். எமது நிதி வசதிக்கு ஏற்ப இச்செய்திகளை உள்ளடக்கி சிறியளவில் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மலர் அமைப்புப் பெற ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள், வரலாற்று நிகழ்வுகளைத் தந்தருளிய தேவஸ்தான ஆதீனக் குருக்கள், பெருமக்கள், திருக்கோணமலை மாவட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பேரன்புக்குரிய கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைத் தலைவர், பிரடரிக் கோட்டை இராணுவப்படை அதிகாரி, ஊர்காவற்படை அதிகாரி, இம்மலரினைத் தயாரிக்கப் புகைப்படங்களைப் பிடித்து உதவிய அன்பர் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலர் அரும் பொலிவுடன் வெளியிடுவதற்கு உதவி, பேராதரவ காட்டிய அருளன்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றி. இம்மலரைச் சிறப்புற அச்சிட்டு உதவிய நமது அன்புக்குரிய யுனி ஆர்ட்ஸ் அச்சகத்தாருக்கும் எமது நன்றியினை நல்கின்றோம்.

இக்கும்பாபிஷேக மலர் அனைவரது பேராதரவு பெற்றுச் சிறப்புடன் அழகாக அமைத்து வெளிவர தோன்றாத் துணையாக நின்ற எம்பெருமான் திருக்கோணேநாத பெருமானின் மலர்ச் சிலம்படியினை வாழ்த்தி வணங்குகிற, ஆலய திருப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தி, அதன் பயனாய் ஞானகுரு வாய்க்கப் பெற்று ஆத்மீக இன்பம் அனுபவித்து இறையடி சேர்ந்த எமது குடும்பத்தின் மூத்த தலைவர் திரு. சின்னத்தம்பி வழியில் நின்று கணேஷ் அவர்களின் நினைவாக இம்மலரை மாதுமை அம்பாள் சமேத கோணநாத பெருமானின் திருப்பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

*'எங்கும் சாந்தி, சாமாதானம் நிலவட்டும் !'*

*திருச்சிற்றம்பலம்*

*'வாழ்க உலகெலாம்'*

*இவ்வண்ணம்,*

கணேஷ் கீர்த்திதாஸ் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலலிங்கம்



லிங்க சொரூப ரூப தியானம்

உலகம்யாவையும் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் கொண்டுள
தலைவரானவர் தம்முடை அம்ஸமோ
டிலகு சுந்தர லிங்கத்தைப் போற்றுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டன் மாநகரிலிருந்து வந்து, திரு. மகேந்திரன் அவர்கள் புதிய கண்டாமணியை ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு.கோ.செல்வராசா அவர்களிடம் கையளித்தபோது எடுத்த படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

Phone : (STD 04112) - 22115

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்

1, சாலை தெரு, [illegible]சிபுரம் - 631 502.

முகாம் :

தேதி 10 6 98

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] அவசியமாகும்.
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible] ஆசீர்வதிக்கிறோம்

நாராயணஸ்ம்ருதி:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டா குரு

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள்

தேவஸ்தான ஆதின கர்தா, பிரதம குரு *"வேதாகமமாமணி"*

பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் வழங்கிய

# ஆசியுரை



இலங்கைத் திருநாட்டின் சிவத்தலங்களில் வரலாற்றுப் பெருமைமிகு தெட்சண கைலாயமெனப் போற்றப்படுகின்ற திருகோணேஸ்வரர் ஆலயத்திற்கு வெளி நாடுகளிலுள்ள சிவனடியார்கள், தொண்டர்களின் பெருமுயற்சியால் இலண்டன் மாநகரில் உருவாக்கப்பட்ட பெரிய கண்டாமணியைச் சிவபக்தர் ஒருவர் தானாகவே இறைபக்தியுடன் முன்வந்து இதற்கான மணிக்கோபுரத்தை சிற்ப சாஸ்திர முறைப்படி சிறப்பாக அமைத்து மணிக்கோபுர மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது எம்பெருமான் திருவருளே. அப்பணிகள் சிறப்புற சிவதொண்டர்களின் பங்குகளும் அளப்பரியன. கோணேஸ்வரப் பெருமானின் மணிக்கோபுர கும்பாபிஷேகம் சிறப்புறவும், மங்கள மணிஓசை ஓங்கார ஒலியாகத் தேசம் எங்கும் பரவி மக்களெல்லாம் மங்களமாய் வாழுவும், அப்பணிகளில் சகலதுறைகளிலும் தொண்டாற்றிய தொண்டர்கள் அனைவரும் சகல சௌபாக்கியமும் பெற்று எல்லாம் வல்ல கோணேஸ்வரப்பெருமானதும் பத்திரகாளி அம்பாளினதும் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டா சிரோன்மணி

நவாலியூர் பிரம்ம ஸ்ரீ சுவாமி விஸ்வநாத குருக்கள் அவர்கள்

வழங்கிய

# ஆசிச்செய்தி



ஈழவளத்திருநாட்டின் பெருமைக்கும், போற்றுதற்கும், ஆத்மீக வழிபாட்டிற்கும், அருளுக்கும் இருப்பிடமானதும் ஞானசம்பந்தப் பெருமானால் வியந்து பாடல் பெற்றதும் பாமநாச தீர்த்த மகிமை கொண்ட தலமாக மிளிரும் ஸ்ரீ மாதுமை அம்பாள் சமேத கோணேஸ்வரப் பெருமான் ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்ததும் சரித்திரப் புகழ் பெற்றதும் திருகோணமலை சிறப்பும் பொருந்திய ஆலயமும் ஆகும்.

இவ்வாலயத்திற்கு சிவபக்தர்கள் சிவதொண்டர்களின் முயற்சியாலும் பரிபாலன சபையினரின் ஒத்துழைப்பினாலும் புதிய மணிக்கோபுரம் ஒன்றை அமைத்து அதற்கு வெளிநாடுகளில் வசிக்கும் சில அன்பர்களின் தாராளமான நிதியினாலும் லண்டன் நகரிலே உருவாக்கப்பட்ட ஓசை பொருந்திய நாத தத்துவத்தை பர்ணமிக்கும் மணியும் நிறுத்தி அதன் ஒலி திருகோணமலை நகர்வாழும் மக்கள் செவிகளின் வாயிலாகப் பரந்து நகர வளர்ச்சியும் பிணி, துன்பம், வறுமை இந்த மணி ஓரைமூலம் மக்களிடம் களைந்து நன்மை பெறச் செய்யும் என்பதே எமது சிந்தனை ஆகும்.

மணிஓசை மணியின் ஓசை தேவர்களை அழைப்பதாகவும், மக்களை துன்பக் கடலிலிருந்து மீட்பதாகவும், சிவ சிந்தனையை தூண்டுவதாகவும், துஷ்ட தேவர்களின் வாசம் அந்த இடத்தை விட்டு நீங்குவதாகவும் ஆகமப் பிராமணங்கள் கூறுகின்றன.

மணிஓசை வாயு தத்துவம் நாத தத்துவத்தைக் கொண்டது. இவ்வித பெருமைச்சிறப்புப் பொருந்திய மணிக்கோபுரமும் அதன் நாதத்தின் சிறப்பும் சைவ உலகிற்கு ஒரு விழிப்புணர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அமைய வேண்டுமென கருணைக்கடலான மாதுமை அம்பாள் சமேத கோணேஸ்வரப் பெருமானின் எமது சென்னி தாழ்த்தி மக்களும் சகல ஆன்மகோடிகள் செவிப்புலன் வாயிலாக மணி ஓசை கேட்டு துன்பம் நீங்கி இன்பம் பெற வேண்டியும் இப்பணிகளில் பங்கு கொண்ட அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று மங்களமாக வாழவும் பிரார்த்தித்து எமது மனமார்ந்த அன்பான ஆசியை அன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

*கோணேஸ்வரப் பெருமானின் திருவடிகளே சரணம் போற்றி*

*இன்பமே சூழ்க வையகமே வாழ்க சர்வம் சிவமயம்*

*சுபம்*

---

*பி. குறிப்பு - கோயிலின் மணிஓசை கேட்பதானால் அக்கிராம மக்களின் பாவம் அகன்று சிவசிந்தனை ஏற்படவும் பூதனபசாச துர் தேவர்களை அவ்விடத்தை அணுகாமல் காப்பதும் என முக்கிய விதி உண்டு. எனவே பூசை, அபிசேகம், உற்சவகாலங்களில் பெரிய மணியை குறிப்பிட்டபடி அடிப்பதும் ஓசை கேட்பதும் ஆகமவிதியாகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஓசை ஒலியெல்லாம் நீயே

இலங்கை நகரின் தென்பால் திருஞானசம்பந்த நாயனார் பாடல் பெற்ற தெட்ஷண கையிலாயமலை திருக்கோணேஸ்வரர் திருவருளினால் திருக்கோணாமலை மக்கள் வெளிநாடுகளினில் இருந்தும் எம்பெருமான் அருட்கடாட்ஷத்தால் அரும்பெரும் பணி ஒன்றை இங்கு நிறைவேற்றி இருப்பது எம்பெருமானின் கருணையே ஆகும். தன்னை மெய் அன்போடு வழிபடும் அடியார்களுக்கு தக்க தருணத்தில் உடன் அருள்பாலிக்கும் மாதுமை உடலுற கோணநாதர் பெரும் கருணையோ கருணை. இதை இங்கு நாள்தோறும் வழிபடும் அடியார்கள் தங்கள் நேர்த்தி உடன் நிறைவேற்றி வைத்து உள்ளார். ஆதலால் தங்களால் இயன்ற அபிஷேக ஆராதனைகள் நிறைவு செய்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அதேபோல் வெளிநாட்டு தொழில்புரியும் சிவனடியார்கள் பெரும் முயற்சியால் இந்த மஹா கண்டாமணி அங்கிருந்தே உருவாக்கி இங்கு வந்தமையும் இறைவன் திருவருளே ஆகும். ஆதலால் இந்த மணிஓசை ஒலிக்க. இந்த நாட்டில் உள்ள சைவாதி பௌத்த ஜனங்களும் ஒற்றுமையுடன் சமாதன சுகவாழ்வும் சுபீஷ்ஷமும் பெற்று, பரமேஸ்வரன் அருளால் நற்கீர்த்தியும் பெற்று சகல செல்வமும் பெற்று வாழ மாதுமை அம்பிகாஸமேத கோணேஸ்வரப் பெருமானின் திருவடிகளை என்றும் வணங்கி வாழ்த்துகிறேன்.

நாதம் கேட்குதடி நாதர் நாதம் கேட்குதடி
மாதுமை கோணநாதர் கோபுர வாசல் நாதம் கேட்குதடி
கீதம் கேட்குதடி மக்கள் துயர்தீர்க்ககேட்குதடி
திருக்கோணமலை கோணேசர் மணிநாதம் கேட்குதடி ! நீலக்கடல் ஓசைகளும் திருநீலகண்டன் மாதுமை உடலுறவன் கோணேசர் மணி நாதம் கேட்குதடி
மக்கள் படும் வேதனை எல்லாம் மணிஓசை ஒலிக்க ஒலிக்க சகல நலமும் பெற்று வாழவேண்டி நாதம்கேட்குதடி
மாதுமை வாசல்கோபுர நாதம் கேட்குதடி
கோணநாதர் நாதம் கேட்குதடி
பக்தர் துயர் நீங்கிடவே - பரமேஸ்
வரலட்ரூபிணி மாதுமை அம்பிகை நாதம் கேட்குதடி !

*ஸன்வே லோகா ஸமஸ்தா*
*சுகிநோ பவந்து!*

சதா. யோகீஸ்வரக் குருக்கள்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிவதொண்டன்*

ஸ்வாமி செல்லத்துரை அருளிய

# ஆசிச்செய்தி

விளக்கினார் பெற்றவின்பம் மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள் தா மருளுமன்றே.

*- அப்பரடிகள்.*

ஆலயங்களில் மணியோசை ஒலிக்கச் செய்வதும் ஓர் அரும்பணியே. கோணைநாதர் கோயிலினின்றும் ஒலிக்கும் மணியோசை 'நிரைகழலரவஞ் சிலம்பொலியலம்பும் நிமலரை'' நினைப்பித்தற்கேற்ற நல்லதோர் சாதனம். எங்கள் சுவாமிகள் ''நினைவு பிரிவது தான் கவலை'', ''மறதியே பெரிய பாவம்'' , "ஞாபகப்படுத்தலே பெரியசாதனை" என்றவாறெல்லாம் சிவநினைவு பற்றிக் கூறுவார்.

கரைகாணாக் கடலையும், உயர்ந்தோங்கியவானையும் தன் திருமுன்னிலையில் காட்டி நிற்கும் கோணமாமலையமர்ந்தார், நாதங் கடந்த ஞானவெளியாயிருக்கும் தம் சோதி சொரூபத்தையே உணர்த்திக் கொண்டு நிற்கிறார். 'இருவரும் அறியா வண்ணம் ஒள்ளெரியா உயர்ந்த'' தம் பரஞ்சோதி ரூபத்தை ஒடுக்கிக் கொண்டு கண்ணினாற் காணுமாறு மாதுமையபாகராக அமர்ந்திருக்கும் பெருமான், நாதாந்த வெளியாயிருக்கும் தமது சொரூபத்தை தம் ஆலயத்தினின்றும் ஒலிக்கும் ஓங்கார நாதத்தால் உணர்த்தத் திருவுளம்பற்றியதும் ஓர் எளிவந்த கலையே.

'வன்செயல் பற்றிப் பேசும் இந்நாளிலே இத்திருப்பணியானது 'அவன் செயலாக' நிலைப்பதாக.

*சிவதொண்டன்,*

ஸ்வாமி செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணேசர் ஆலய பரிபாலன சபை
Thirukoneswara Temple Paripalana Sabai

President:
M. K. SELLARAJAH j.p.u.m.
Attorney at Law & N. P.
Justice of peace all Island
&
Unofficial Magistrate.



Main Street,
TRINCOMALEE.

# மணிக்கோபுர வழிநின்று மணி ஓசை



திருக்கோணேசப் பெருமானின் வரலாறு அரசர்களின் பின்னணியில் அமையப் பெற்றுள்ளது.

இராவணன் இலங்கை வேந்தன் அவனது நினைவு இன்றும் தங்கும், இராவணன் வெட்டு.

திருப்பணி செய்தவன் குளக்கோட்டன் கந்தளாய் குளம் அவன் கட்டியது. திருக்கோணேசப் பெருமானின் பூசைகளை முறையாக நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம்.

டச்சுக்காரர் வருகை கோயில் இடிக்கப்பட்டது. கோபுரங்கள் வீழ்ந்தன.

பிரித்தானிய இராச்சியத்தின் ஆளுகையில் இலங்கை வசப்பட்டது. திருக்கோணமலை நகரம் முக்கிய பிரித்தானிய தளமாக விளங்கியது.

கோணேசர் கோயில் பகுதி படைத்தளமாக இருந்தது. வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை நாட்கள் மட்டும் மலைக்கு பூசை நடைபெற்று வந்தது. பூசை, வழிபாடு நாட்களின் கட்டுபாட்டில் அமையப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாள் கட்டுப்பாடு இல்லை. ஆனால் சிறு சிரமம் இன்றும் அன்று போல் தொடருகின்றது. அவனது அருள் ஆட்சி அதனைத் தொடர்ந்தும் ஏற்குமானால் எமது சக்தி அதற்கு மேலாக அமைய முடியாது.

கோபுரங்கள் வீழ்ந்தபோது மணிக்கோபுரமும் வீழ்ந்தது. கலியுகத்தில் மீண்டும் அருணகிரியார் பாடிய கோபுரம் எழ முடியாவிடினும் மணிக்கோபுரம் எழுந்து விட்டது. கோபுரம் வருமுன் மணி வந்து விட்டது ஓசை தருவதற்கு.

இலங்கையில் பிறந்த திருக்கோணேசப் பெருமான் அடியவர்கள் பிரித்தானிய பிரஜைகளாக வாழ்ந்த போதும், திருக்கோணேசர் கோயிலின் மணி ஓசை கேட்க வேண்டும். அம்மணி ஓசை திருக்கோமலையில் அமைந்துள்ள கிராமங்களிலும் கேட்க வேண்டும் என்ற அருள் எண்ணத்தை கோணேசப் பெருமான் அவர்களின் உள்ளத்தில் உருவாக்கினார் போலும். அந்த எண்ணம். எந்த நேரம் நிகழ வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்க முடியாது, அவன் தான் தீர்மானிக்க வேண்டும். "நான்" என்ற என்ற நிலையற்று "நாம்" என்ற பெருநிலை, பணிவு நிலை தானாக நமக்கு வேண்டும். அதுவே உண்மையான திருப்பணி இறைவன் பணி. இதுவே இப்பூமியின் நினைவு அதனை மீறுவோர் எவரும் வீழ்ந்து விடுவர்.

எனவே மிகவும் எழிமையுடன் தமது பெயரைப் பிரபலப்படுத்த வேண்டாம் என்று கூறியவாறு அமைதியுடனும் அடக்கத்துடனும் இப்பணி இன்று நிறைவு பெறுகின்றது.

பல லட்சம் பெறுமதி மிக்கது இப்பணி. மணியும் கோபுரமும் அவன் அருளில் நிறைவுறும் இவ்வேளையில் அனைத்து உபய அன்பர்களுக்கும் எமது திருக்கோணேசர் கோயில் பரிபாலன சபையினர் நன்றி கூறுகின்றனர். திருப்பணிக்கு நிதியும் வேறு உதவிகளும் செய்த அனைத்து சைவ மெய்யன்பர்களுக்கும் அவன் திருவடி அருள் கிடைக்கும் என்ற உயர் நம்பிக்கையுடன் அவன்தாள் போற்றி நன்றி கூறி மகிழ்கின்றேன்.

மு. கோ. செல்வராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம்

திருக்கோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரின்

# வாழ்த்துச்செய்தி



பாடல் பெற்ற புண்ணிய பூமியாம் திருக்கோணேஸ்வரத்தில் மாதுமை அம்பாள் சமேதர கோணநாயகனின் ஆலய மணிக் கோபுர கும்பாபிஷேகம் நிறைவுபெற அருள் பாலித்திருப்பதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

எம்பெருமான் மணிக்கோபுர திருப்பணிகள் அன்பர் கணேஷ் கீர்த்திதாஸ் அவர்களால் கோணேசப் பெருமானின் ஆசியுடன் இனிதே நிறைவேறியுள்ளது.

குளக்கோட்டு மன்னனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆலய திருப்பணி வேலைகள் தொடர்ந்தும் நடைபெற வேண்டுமென்பதே இறைவனின் சித்தம். ஆகையால் கோணேசப் பெருமானின் ஆலயத் திருப்பணி வேலைகள், தொழும்புகளை பயபக்தியுடன் செய்பவர்கள் குறைகள் ஏதுமின்றி நிறைவாக வாழ்வார்கள் எனக் கூறும் கோணேசர் கல்வெட்டின் உண்மைத் தன்மையை உணர்ந்து, இக்கோபுரத்தின் ஆலய மணியை லண்டன் வாழ் சைவப் பெருமக்கள் உவந்தளித்து இறைகடன் செய்திருக்கின்றார்கள். கோணமலைத் தலைவன் அவர்களுக்கு அருள் புரிவாராக.

திருக்கோணேஸ்வரப் பெருமானின் ஆலய மணி ஓசை குடிதனை நெருக்கிப் பெருக்காய் வாழும் கோணைநகர் எங்கும் ஒலித்து, பக்தியும் பரவசமும் மக்கள் நெஞ்சில் பிரதிபலித்து, எம்பெருமானின் அருள்வெள்ளம் எல்லோரையும் இன்புற்று வாழ வழி செய்ய வேண்டி பணிந்து மணிக்கோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவேற வாழ்த்துகின்றேன்.

*இவ்வண்ணம்,*
*அன்புடன்,*

**இரா. சம்பந்தன்**
*பாராளுமன்ற உறுப்பினர்,*
*திருக்கோணமலை மாவட்டம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# May Lord Konesar Shower his blessings



When I was serving as Governor, Northern & Eastern Provinces at Trincomalee I had the opportunity of involving myself with the sacred Consecration ceremony of the historic Thirukoneswaram temple in 1993. Prior to the ceremony, restoration work and improvements were done to the temple. One day, when I visited the temple to inspect the work an old gentleman with beard, who was living in the vicinity of the temple, thanked me for organising the ceremony and mentioned that it was the desire of the Hindus of Trincomalee that the temple should have a large bell so that the reverbaration of its peal could be heard throughout the town, as it was said to be so before the ancient temple was destroyed by the Portuguese in 1624. This suggestion came to my mind when I was chatting with Mr. Ari Mahendra, a class-mate of mine, who had come to Trincomalee on a holiday from U. K. I mentioned this to him straightaway. Ari readily agreed to do the needful. I then requested leading Hindus of Trincomalee to form themselves into an organisation to assist Mr. Mahendra to raise funds for the bell in U. K. and to arrange for the construction of the bell-tower in receipt of the bell, from funds collected locally. Accordingly Thirukoneswaram Bell Tower Construction Society was formed in 1964 and was functioning actively. Mr. Mahenra brought the bell to the temple during latter part of 1997. While the Society was making preparations to construct the tower planned by them, I was told that a devotee had come forward to construct the tower at his own expense. I am indeed pleased to know that the bell tower has since been completed.

May Lord Konesar shower His Blessings on all who were involved in this holy service.

**Lt. Gen. G. D. G. N. Seneviratne, VSV**
*former Governor,*
*Northern & Eastern Provinces.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணநாதனின் கோபுர மணியோசை



பாடல் பெற்ற திருத்தலமான கோயிலும், சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையில் வீற்றிருந்து அருள் வழங்கும் எம் பெருமானின் சந்நிதானத்தின் மணியோசை நகரெங்கும் வியாபித்து ஒலிக்கக்கூடியவாறு மணிக்கோபுரம் ஒன்று நிர்மாணம் செய்யப்பட்டு, அதன் முதல் ஓசை இன்று இங்கு ஒலிக்கிறது.

இராஜகோபுரத்தோடு, மணிக்கோபுரமும் அமைக்கப்பட வேண்டுமென்பது எமது இந்துமத சாத்திர முறையாக இருந்தாலும் இதனை இன்றுவரை நிறைவு செய்ய முடியாத ஒரு நிலைமை இருந்து வந்திருக்கின்றது. இதனைக் கவனத்திற்கொண்டு இலண்டன் மாநகரிலிருந்து சைவப் பெருமக்களால் அனுப்பப்பட்ட கண்டாமணி தனது பணியைச் செய்ய ஒரு மணிக்கோபுரம் அவசியமானதாக இருந்தது. இந்த அவசிய பணியை இறைபணியாகக் கொண்டு சைவப் பெருமகன் கணேஷ் கீர்த்திதாஸ் அவர்கள் நிர்மாணம் செய்ய முன்வந்து இன்று அது கம்பீரமாக எம் பெருமான் போல் நிமிர்ந்து நிற்கின்றது. இந்த அரும்பணிக்கு அத்திவாரம் இடப்பட்டபொழுது, இவ்வடியேனுக்கும் அத்திவாரக்கல் நாட்ட இறைவன் அருள் தந்தான். நிமிர்ந்த இம்மணிக்கோபுரம், அதிலே பொருத்தப்படும் கண்டாமணி இறைவனின் நாதமாக எம் எல்லோர் நெஞ்சங்களிலும் ஒலிக்கவே செய்யும். இந்த ஒலியானது சோம்பி இருப்பவனைத் தட்டி எழுப்பும் சக்தி கொண்டதாகவும், விரக்தி உற்றவர்களை வீறுநடை போட துணை நிற்பதாகவும் எமது இந்து சமயத்தின் அத்தனை ஆற்றல்களும் ஆசிகளும் இறைவனின் அருள் என நினைத்து, அனைத்து மக்களையும் அன்போடும், கருணையோடும், இறை அருளோடும் வாழ வைக்கும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது.

எமது பெருமான், எம் மதத்தவரையும் தம்வசம் வைத்துக் கொள்ளும் கருணைமிகு அருட்கடல், இதனாலேயே சமுத்திரத்தின் மத்தியில் கம்பீரமாக நின்று எமக்கெல்லாம் அருள் தருகின்றான். இந்த அருள் தொடர்ந்தும் எமக்குத் தர வேண்டுமென இறைவனின் பாதாரவிந்தங்களைத் துதிக்கின்றேன்.

*கோன்முறை அரசு செய்து,*
*குறைவிலாது உயிர்கள் வாழ,*
*உன்னருளினை வேண்டுகின்றோம்.*

பெ. சூரியமூர்த்தி, ஜே. பி. யு. எம்.
*தலைவர்,*
*நகராட்சி மன்றம், திருக்கோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

221 වන බලසේනාව සහ සම්බන්ධීකරණ මූලස්ථානය
221 BRIGADE & COORDINATING HEADQUARTERS

කෙසෙල්තුඩුව
ත්‍රිකුණාමලය.
දුරකථන
බලසේනාධිපති/සම්බන්ධීකරණ නිලධාරි 026 - 22495
බලසේනා මේජර් 026 - 22330
හුවමාරු 026 - 22340
026 - 22428
026 - 22182

PLANTAIN POINT
TRINCOMALEE
Tele:
Commander/Coordinating Officer 026 - 22495
Brigade Major 026 - 22330
Exch: 026 - 22340
026 - 22428
026 - 22182




# Message

Thirukoneswarm is one of the most important Hindu Temples in Sri Lanka. Hindu devotees from all walks of life come to worship this temple . People from other communities also come and pay their respects and it has a significant historic archieological and national importance and value.

The temple is situated on a rock and a very beautiful surrounding bordering the sea with the famous lovers leap. People from all communities come to this temple to get various help to their problems and this temple is known to have miracles from ancient times.

The temple has two major festivals (Two Kumbabhishakam ) . This is situated inside historic Fortress of Fort Fredrick and one of the Major Tourist attractions in Trincomalee.

Construction of a new large Bell Tower had been financed by Mr. Keerthidas a Hindu devotee from Trincomalle now employed in Germany. The large bell for that has been donated by Hindu residence in U.K.

I sincerely appreciate the donation which had been an outstanding requirement of the Temple. I wish the Kumbabhishakam festival all the very best and this will help to develop the existing communal harmoney in Trincomalle and throughout the country as a whole.

May the Blessings of the God be with you:

Brigadier U.B.L.Fernando RWP,RSP, psc
Commander 221 Brigade and
Co-ordinating officer Trincomalee (south ).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ත්‍රිකුණාමලය මූලස්ථාන ප්‍රධාන පොලිස් පරීක්ෂක තුමාගේ පනිවිඩය



ත්‍රිකුණාමලයේ පිහිටා තිබෙන ශ්‍රී කෝනේස්වර කෝවිලේ අභිනවයෙන් ඉදි කරන ලද සංඨාර කුළුණ සහ සංඨාරය විවෘත කිරිම නිමිතෙන් සකස් කරන ලද සමරු පොතට මාගෙන් පනිවිඩයක් ලබා දිමට ලැබිම මා භාග්‍යක් ලෙස සලකන වා.

මෙම සංඨාර කුළුණ ඉදිකිරිමට මුල් ගල තැබු 1998.03.15 දින මේ සඳහා මුල්ගලක් තැන්පත් කිරිමට වාසනාවන්ත දුර්ලභ ඝනසේ අවස්ථාවක් ලැබුණා. මෙයද මට කෝනේස්වරන් දෙවියන් ලබා දුන් අවස්ථාවක් සේ සලකනවා. ශ්‍රී කෝනේස්වර දෙවිය න්ගේ බලය පතුරුවන කෝනේස්වර අඩවියේ මට සේවය කිරිමට ලැබිමදමම භාග්‍යක්සේ සලකනවා. මම දැනට ත්‍රිකුණාමලය මූලස්ථාන ප්‍රධාන පොලිස් පරික්ෂක වශයෙන් වසර තුනක් පමණ ත්‍රිකුණාමලය ජනතාවට සාමකාමි ජිවිතය ක් ගත කිරිමට සේවය කරනවා. ඒ සඳහා ශක්තිය, ධෛර්ය ලබා දුන්නේ ශ්‍රී කෝනේස්වර දෙවියන් බව මගේ විශ්වාසය යි.

ශ්‍රී කෝනේස්වර දෙවියන්ගේ සත්‍ය, බලය, ලෝකවාසි සැම ජනවාර්ගියෙක්ම, ආගමිකයෙක්ම වටහාගෙන සිටි. ඒ නිසාම ජාති, ආගමික හෝ කුල භේදයකින් තොරව ජනතාව කෝනේස්වර දෙවියන් වැඳ පුදා ගැනිමට පැමිනේ.

සිව රාත්‍රි දිනයට පසු දින ශ්‍රී කෝනේස්වර දෙවියන් වහන්සේ රූ ගත් පෙරහැර විධි සංචාරයේදි මා සහෝදර නිලධාරීන් සමඟ පසු දින පහන් වනතුරු පෙරහැර සමඟම විධි සංචාරය කරමින් ආරක්ෂාව සළසත්තේ ඉමහත් සතුටිනි. මෙම කෝවිලේ වාර්ශිකව පවත්වන මහා උත්සවයට සහභාගි විමට සහ සහභාගි වන බැතිමතුන්ට දානය පිරිනැම්මට අවස්ථාවක් ලබා දී තිබිම ගැන මා එම පරිපාලන කමිටුවේ සභාපති තුමාට සහ සංවිධායක කමිටුවට මාගේ ස්තුතිය මේ අවස්ථාවේදි පිරිනැම්මට කැමත්තෙමි. මෙම උත්සවයේ මෙදින සියලු කටයුතු ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කයේ සියලු පොලිස් නිලධාරින්, නිලධාරිනියන්ගේ සහභාගිත්වයෙන් ඉතා උසස් මට්ටමින් සිදු කිරිමට උදව් කරන සියලු දෙනාටමත් ස්තුතිය කරන්න මෙය අවස්ථාවක් කර ගැනිමටද කැමත්තෙමි.

මෙම සංඨාර කුළුණ ඉදිකිරිමට සහ සංඨාරය විදේශ රටක සිට එවිමට දාය ක වූ සියලු බැතිමතුන් මා මෙම අවස්ථාවෙදි මෙතහි කරන්නේ ඉතාමත් ගෞරවයෙ නි. මෙම කෝවිලේ දියුනුව මා ඉතා අගේ කරමි. ශ්‍රී කෝනේස්වර දේවාලයේ මෙම අභිනවයෙන් ඉදිකර පූජා කරන මහා සංඨාරයේ සංඨාර නාදය සමග ශ්‍රී කෝනේස්වර දෙවියන්ගේ ශක්තිය, බලය සුලගට මුසු වී එම ආශිර්වාදයෙන් අප සියලු දෙනාටම සාමය උදාවේවා යැයි මා ප්‍රාර්ථනා කරමි.

ප්‍ර:පො:ප: එඩ්මන්ඩ් මහේන්ද්‍ර
*මූලස්ථාන පොලිස් පරීක්ෂක*
*ත්‍රිකුණාමලය*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவர்களின் வாழ்த்து மடல்

வரலாற்றுப் பெருமை மிக்க திருக்கோணேஸ்வரப் பெருமானுக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மணிக்கூட்டுக் கோபுர வாழ்த்துமடல் நூலில் எனக்கும் வாழ்த்தும் பேறு கிடைக்கப் பெற்றது ஒரு தேவ பாக்கியமாகும்.

1998.03.15ம் திகதியன்று மணிக்கூட்டுக் கோபுர அடிக்கல் நாட்டு வைபவத்தில் எனக்கும் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது பெருமையாகும். கோணேஸ்வரப் பெருமான் எழுந்தருளி இருக்கும் இந்தப் புண்ணிய பூமியில் எனக்குச் சேவை செய்யக் கிடைத்தமையும் ஒரு வரப்பிரசாதமாகும். நான் கடந்த மூன்று வருட காலமாகத் திருகோணமலை மக்கள் சமாதானமாக வாழ்ந்து வர உழைத்து வருகின்றேன். இதற்கு வேண்டிய சக்தியையும் ஆசீர்வாதத்தையும் திருக்கோணேஸ்வரப் பெருமான் எனக்குத் தந்தருளியுள்ளார். திருக்கோணேஸ்வரப் பெருமானின் மகிமையை அறிந்து சகல மக்களும் இன, மத, மொழி, குல வேறுபாடின்றி இத்தேவஸ்தானத்திற்கு வருகின்றார்கள்.

சிவன் ராத்திரி தினத்துக்கு மறுநாள் திருக்கோணேஸ்வரப் பெருமான், நகர ஊர்வலம் தொடக்கம் முதல் தேவஸ்தானத்துக்குச் சென்றடையும் வரையும், நானும் எனது சக உத்தியோகத்தர்களும் மிகவும் பக்தியாகக் கடமை செய்யும் பேற்றைப் பெற்றுள்ளோம். வருடா வருடம் நடைபெறும் கொடியேற்றத் திருவிழாக்களில் எமது திணைக்களத்திற்கும் ஒரு உபயம் கிடைக்கப்பெற்று அவ் உபயதினத்தன்று நாங்கள் அடியார்களுக்கு அன்னதானம் கொடுக்கும் பாக்கியத்தைப் பெற்றுள்ளோம். இதற்காக இவ்வாலய பரிபாலன சபைத் தலைவருக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் நன்றிக் கடமை உள்ளவராகுவோம். இந்த உபயத்தை எமக்கு நடாத்தப் பல வழிகளிலும் உதவி உபகாரம் செய்தவர்களுக்கும் நன்றிக்கடன் செலுத்த ஒரு தருணம் கிடைத்ததையிட்டு, நான் மகிழ்கின்றேன்.

இப்புதிய மணியை வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்த அடியாருக்கும், அதற்கு உதவி செய்த அன்பர்களுக்கும், இம் முயற்சிக்குக் காரணமாக இருந்தவர்களுக்கும் எனது அன்பான வாழ்த்துக்கள். இவ்வாலயத்தின் வளர்ச்சியைக் கண்டு நான் ஆனந்தம் அடைகின்றேன்.

மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து ஒலிக்கும் தேவநாதம் கோணேஸ்வரப் பெருமானின் சத்தியையும், மகிமையையும் காற்றில் கலந்து உலக மக்கள் அனைவருக்கும் வழங்கி, அவர்கள் அனைவரும் சமாதானமாக வாழ வேண்டும் எனப் பிரார்த்திகின்றேன்.

*இவ்வண்ணம்,*
*விசுவாசமுள்ள,*
எம். ஏ. எட்மன் மகேந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிஉரை

அன்பே சிவம் ! அறிவே துணை !

மூவுலகிற்கும் முத்தொழிலுக்கும் அதிபதியாகவும், இப்பூவுல அன்பர்களுக்கும், அடியார்களுக்கும், தெய்வமாகவும், ஆன்மீகத் தொண்டர்களுக்குக் குருவாகவும், திக்கற்றவர்களுக்கெல்லாம் தாயாகவும், தந்தையாகவும், உயிர்காக்கும் தோழனாகவும், உயர்ந்த சிந்தனையாளர்களின் உள்ளத்தின் ஒளியாகவும், பிரம்படியால் உணர்த்திய பிட்டுக்கு மண் சுமந்த பிள்ளையாகவும், அன்பால் தன்னை அறிந்த அடியார்களுக்குச் சிவமாகவும் இருந்து இப்பிரபஞ்சத்தை இயக்கிவரும் தெய்வத்தின் தெய்வமாகிய சிவபெருமான் பஞ்ச ஈசுவரங்களிலும் முதல் ஈசுவரமாகிய திருக்கோணேஸ்வரத்தில் இருந்து அருள் பாலித்து வரும் "மாதுமை சமேத கோணநாததேஸ்வரர்" ஆலயத்தின் மணி கோபுரம் நிறுவும் அறப்பணியில், லண்டன் மாநகரைச் சேர்ந்த இந்து அடியார்கள் மேலும் இந்த மணிக் கோபுரத்திருப்பணிக்கு மூலகாரணமாக இருந்த அன்பர்கள், ஆலய அறங்காவலர்கள், மற்றம் இத்திருப்பணிக்கு உள்ளத்தாலும், உடலாலும், பொருளாலும் தத்தம் பங்கினை இறை உணர்வோடு வழங்கியுள்ள ஏனைய நாட்டின் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்த அன்பர்கள் அனைவருக்கும் எல்லா நலன்களையும், வளங்களையும், அருளையும், சித்தியையும் ஆசியுடன் வழங்கிட எம் பெருமான் ஆகிய ஈசுவரனை வேண்டி வணங்குகிறேன்.

ஆன்மீகத் தொண்டில் அன்பர்களை வாழ்த்துகிறேன்!

"சிவத்திற்கு மேல் தெய்வமில்லை
சித்திக்கு மேல் சாத்திரமில்லை"

எங்கும் எதிலும் அனைத்தும் சிவமாகவும்
சிவமே அனைத்தாகவும் அறிவோமாக !

*என்றும் அன்புடன்,*

23.10.1998

**Prof. Dr.. K. VK. சிவசுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message to be read out at the Kumbhabisekam of Tirukoneswaram New Bell and Bell Tower

I am very glad to hear of the Manigopuram Kumbhabisekam of the New Bell and the New Bell Tower at the Tirukoneswaram Temple. I was the Funds Manager for the collection of donations for the Temple Bell. Literally many hundreds of people donated small amounts of money which I collected outside Wimbledon Pilliar Kovil in London over a period of many months. I was helped in this mainly By Mr. P. Thevarajah.

Literature was handed out and also posted to many thousands of people and also ads were placed appealing for funds. Some people responded by sending donations. Many of my friends had faith in me and helped and sent donations; and also asked their friends to give donations.

Nearly all the money for the bell was collected by me in the U. K. A very few small donations were received from abroad. I also organized a dinner to raise funds and this brought in approximately £,1000.

Before buying the bell I made inquiries in many countries about bells. Finally I went to France and satisfied with the bells they produced. The bell was made in this French Bell Factory and weighed 400 Kilos.

The Bell was then shipped to Colombo. I came to Colombo at my own expense and then got the Bell transported to Trincomalee and handed over the bell on October 7, 1997 to the Paripalana President Mr. M. K. Selvarajah.

I am extremely pleased to hear that devotee Mr. Keertidas has very kindly financed the construction of the Bell Tower. We should all thank him for his magnaminous contribution. My thank and best wishes to all who contributed and helped in the Bell and Bell Tower Project.

May Lord Koneswarer bless the New Bell and the New Bell Tower and also all of you and also those of you in Trincomalee and also all people worldwide who were unable to be present here today.

**A. Mahendra**

*10, Townley Road,*
*Dulwich, London*
*United Kingdom.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Thirukoneswaram Temple Trincomalee, Sri Lanka
## BELL FUND DONATIONS
### List of Donations

| Name | Amount (£. P.) | Name | Amount (£. P.) |
|---|---|---|---|
| Dr. M. Mahendra | 100.00 | Mrs. M. Pathmanayagam | 25.00 |
| Mr. S. Sivarajah | 25.00 | Mr. T. Nandakumar | 10.00 |
| Dr. S. Arunachalam | 50.00 | Mr. K. Sundaramoorthy | 15.00 |
| Cash collection at Wimbledon Temple | 26.15 | Mr. K. Sucindran | 10.00 |
| Mr. S. Baskaran | 30.00 | Mr. M. Sivakumar | 5.00 |
| Mr. & Mrs. Thurairetnam | 9.00 | Mr. S. Sritharan | 5.00 |
| Mrs. S. Dayanandarajah | 50.00 | Mr. R. Balaranjan | 5.00 |
| Mr. N. Sivakumaran | 25.00 | Collection at Wimbledon Temple | 70.95 |
| Collection at Temple | 61.93 | Mr. Y. Partheipan | 25.00 |
| Mr. S. Saravanamuthu | 50.00 | Mrs. S. Sivanithy | 25.00 |
| Mr. S. Arumugam | 10.00 | Dr. V. Sivagnanavel | 50.00 |
| Mr. S. G. Mohan | 200.00 | Mr. M and Dr. Mrs. V. Rudran | 64.00 |
| Mr. M. Sivarajah | 25.00 | Mr. S. Arunaminpathy | 5.00 |
| Mr. Anandajothy Sivagurunathan | 5.00 | Mr. K. Rajah | 9.00 |
| Collection at Wimbledon Temple | 51.89 | Mrs. G. Kanagasabai | 30.00 |
| Anonymous Postal order | 15.00 | Miss T. S. Vadivelu | 15.00 |
| Dr. M. Sri Ranganathan - Ireland | 50.00 | Mr. S. Sivashanmugam - Australia | 10.00 |
| Mr. I. Sathananthan - Switzerland | 20.00 | Mr. & Mrs. M. L. Bikoo | 25.00 |
| Dr. R. Baskaran | 15.00 | Mr. E. Raviraj | 5.00 |
| Mr. V. Srirangan | 21.00 | Mr. R. Kalaiyalahan | 15.00 |
| Mr. V. Yogaratnam | 5.00 | Mr. P. Jeganathan - South Africa | 25.00 |
| Miss K. Pathmaseni | 15.00 | Mr. S. Ambalavanar | 20.00 |
| Mr. S. Muraledaran | 5.00 | Mr. R. S. Thiyagarajah | 15.00 |
| Mr. N. Sanmugathasan | 10.00 | Mr. S. Kandasamy | 10.00 |
| Ms. N. Sadanand | 10.00 | Wimbledon Temple collection | 12.62 |
| Mr. M. Sivadhas | 20.00 | Mr. S. D. Moonesinghe | 20.00 |
| Mrs. S. Anandalingam | 10.00 | Mr. V. Sathianathan | 10.00 |
| Mr. N. Sanmugathasan | 15.00 | Mr. A. Maheetharan | 15.00 |
| Mr. T. Rajeshwara | 15.00 | Mr. P. Neelendra | 25.00 |
| Mr. A. K. Vairamuthu | 25.00 | Mr. & Mrs. S. Sivadas | 25.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Name | Amount (£. P.) |
|---|---|
| Nupura Kendra Dance School | 25.00 |
| Mr. G. Kumarasuriyar | 10.00 |
| Mr. G. Patten | 15.00 |
| Dr. J. Singanayagam | 10.00 |
| Mr. S. Sivayogarajan | 10.00 |
| Mr. S. Varathan | 25.00 |
| Mr. P. Gnananandan | 25.00 |
| Mr. S. Nadasen | 10.00 |
| Mr. K. Raguraj | 6.00 |
| Mr. A. Chandarkumar | 10.00 |
| Collection at Wimbledon Temple | 50.83 |
| Mr. T. Selvaratnam | 10.00 |
| Mr. K. Sittambalam | 100.00 |
| Dr. J. Subramaniyan | 5.00 |
| Dr. P. Maheswaran | 10.00 |
| Mrs. A. Viswambaran | 5.00 |
| Mr. R. Thillainathan | 15.00 |
| Mr. N. Vivekananda | 10.00 |
| Pandit K. S. Trikha | 2.50 |
| Mr. S. Senthitselvan | 25.00 |
| Mr. C. K. Mahendran & Mr. E. Parameswaran | 50.00 |
| Mr. K. Yogamurthy | 15.00 |
| Dr. T. Nadaraja - Ireland | 25.00 |
| Mr. T. R. Mahendran | 10.00 |
| Mr. & Mrs. Sritharan | 5.00 |
| Mr. A. Theivendaram | 1.00 |
| Mr. J. C. J. Shangkaran | 50.00 |
| Mr. J. R. Robertson | 8.65 |
| Wimbledon Temple collection | 10.46 |
| Mr. A. V. Sakthivel | 51.00 |
| Mr. K. Nithianandarajah | 5.00 |
| Mr. & Mrs. Selvamogan | 15.00 |
| Mr. P. Keetheeswaranathan | 10.00 |

| Name | Amount (£. P.) |
|---|---|
| Mr. M. Sivakumar | 10.00 |
| Wimbledon Temple collection | 6.60 |
| Mr. R. Sivanithy | 20.00 |
| Dr. N. M. Selvarajah | 25.00 |
| Mrs. O. Aarons | 5.00 |
| Miss Joyce Scott | 3.00 |
| Dr. K. Sivakumar | 10.00 |
| Dr S. S. Bala | 100.00 |
| Mr. C. Kathiresan | 10.00 |
| Mr. S. Ramachandran - U. S. A. | 10.00 |
| Mr. & Mrs. Singaravadivu | 75.00 |
| Mr. I. Chelvathurai | 10.00 |
| Mr. W. Soder - Switzerland | 51.50 |
| Mr. N. Balendran | 30.00 |
| Dr. N. Sahathevarajan | 25.00 |
| Dr. & Mrs. Rajasekaran | 100.00 |
| Dr. M. Muthulingaswamy | 100.00 |
| Mr. P. Ranganathan | 20.00 |
| Dr. C. Paranjothy | 25.00 |
| Mr. R. Rajaratnam | 20.00 |
| Mr. S. Sivakumar | 20.00 |
| Mr. N. Sidamparapillai | 25.00 |
| Mr. N. Ariaratnam | 50.00 |
| Mr. P. Ragupathy | 100.00 |
| Dr. S. Sriskandarajah | 250.00 |
| Mr. S. Vanigasooriyar | 10.00 |
| Dr. S. Chitsabesan | 10.00 |
| Dr. N. Balendran | 80.00 |
| Mrs. V. Balendran | 25.00 |
| Miss. Balendran | 1.00 |
| Dr. S. Balasunderam | 25.00 |
| Mr. S. Murugathas | 150.00 |
| Mr. P. Thevarajah | 20.00 |
| Mr. A. Mahendra | 504.46 |
| **Total** | **4133.54** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. அரி மகேந்திராவிடம் இருந்து பெற்ற கும்பாபிஷேகச் செய்திகள்

புதிய மணிக்கான மணிக்கோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். விம்பிள்டன் பிள்ளையார் கோயிலில் வைத்துத்தான் பல நூறு பேர்களிடம் சிறுசிறு தொகையாக இந்த மணிக்கான நிதி என்னால் சேகரிக்கப்பட்டது. இப்படிச் சேர்ப்பதற்கு பல மாதங்கள் எடுத்தது. திரு. பி.தேவராஜா என்பவர் எனக்கு மிக உதவியாக இருந்தார். இந்த நிதியைப் பெறும் நோக்கத்திற்காக இம்முயற்சி பற்றிய செய்திகளை ஆயிரக்கணக்கில் துண்டுப்பிரசுரம் மூலமாக வெளியிட்டும், தபால் மூலம் மற்றவர்களுக்கு அனுப்பியும், மேலும் விளம்பரங்கள் பிரசுரித்தும்தான் இந்நிதி கோரப்பட்டது. சிலர் இந்தக் கோரிக்கைக்கு செவிமடுத்து தங்களால் இயன்றதை அனுப்பிவைத்தனர். பல நண்பர்கள் என்னில் கொண்ட விசுவாசத்தினால் பண உதவியைச் செய்ததுமல்லாமல் தங்களுடைய நண்பர்களுக்கும் இதுபற்றித் தெரியப்படுத்தி, இந்த முயற்சிக்குப் பெரிதும் உதவினார்கள்.

இந்த மணிக்கான பெரும் பகுதிப் பணம் இங்கு இங்கிலாந்தில் என்னால் பெறப்பட்டது. சிறிய அளவிலான தொகைதான் வெளிநாட்டில் வசிக்கும் அன்பர்களிடமிருந்து பெறப்பட்டது. நான் இந்த நிதியைத் தேடும் முயற்சிக்காக ஒரு விருந்து வைபவம் ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலம் ஆயிரம் ஸ்டேர்லிங்ஸ் பவுண்களைச் சேகரித்தேன்.

நான் இந்த மணியை வாங்குவதற்கு முன்னர் இது விஷயமாக பல நாடுகளிலுள்ள மணியை உருவாக்கும் வார்ப்பக சாலைகளில் தொடர்பு கொண்டு விசாரித்து கொண்டிருந்த சமயம் பிரான்ஸ் நாட்டிலுள்ள வார்ப்பக சாலையில் இந்த நா நூறு கிலோ நிறையுடைய மணி இருப்பதைக் கண்டு விரும்பி வாங்கினேன். அப்படி வாங்கிய மணியை அங்கிருந்து என்னுடைய சொந்தச் செலவில் கொழும்பு வரை கொண்டு வந்து, திரும்பவும் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு 7.10.1997 இல் கொண்டு வந்து திருக்கோணேஸ்வரம் பரிபாலன சபைத் தலைவர் திரு. மு. கோ. செல்வராஜாவிடம் ஒப்படைத்தேன்.

அன்பர் கணேஸ் கீர்த்திதாஸின் நல்லெண்ணத்திற்கும், மணிக்கோபுரம் கட்டுவதற்கு அவர் சம்மதித்து வழங்கிய அளப்பரிய நன்கொடைக்கும் நாம் எல்லோரும் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். எனது தனிப்பட்ட நன்றிகளை இக்கண்டாமாமணிக்கு உதவியவர்களுக்கும், கண்டாமணிக் கோபுரத்தை உருவாக்க உதவியவர்களுக்கும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தப் புனித கும்பாபிஷேகத்தன்று திருக்கோணேசப் பெருமானின் அருள், புனித கண்டாமணிக்கும், புனித கண்டாமணிக் கோபுரத்திற்கும், திருக்கோணமலை வாழ் மக்களுக்கும், உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கும், இந்தப் புனித தினத்தில் நேரில் வர முடியாதவர்களுக்கும் கிடைக்கும் என நம்பிக்கை கொள்வோமாக.

அரி. மகேந்திரா


*10, டவுன்ஸி றோட்,*
*டுல்விச், லண்டன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்த ஸ்ரீ லெட்சுமி நாராயணர் கோவில் கி.பி. 1624 இல் போத்துக்கீசர் கோவிலை அழிப்பதற்கு முன்னிருந்த தோற்றம்



குளக்கோட்டு மன்னன் திருப்பணிகள் செய்த மாதுமை அம்பாள் கோவில் கி.பி. 1624இல் போத்துக்கீசர் கோவிலை அழிப்பதற்கு முன்னிருந்த தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# திருக்கோணேஸ்வர வரலாறு

சைவப் புலவர், பண்டிதர், ஞான சிரோன்மணி, இ. வடிவேல்



ஈழ நாட்டில் பண்டைக் காலந் தொடக்கம் பல சிவஸ்தலங்களிருந்து வருகின்றன. அவற்றுள் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் இரண்டும் ஈழ நாட்டின் இருகண்கள் போல உலக இந்துக்களின் கவனத்திலிருந்து வருகின்றன. திருக்கோணேஸ்வரம், தெட்சண கயிலாயம் என்று போற்றப்பட்டு வருகின்றது. தெட்சணகயிலாய புராணத்தில் கூறப்படுகின்ற வரலாறுகளிலிருந்து இதன் உண்மை புலப்படுகின்றது.

கோணேசர் கோவில் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுச் சிறப்புக் களையுடைய சிவஸ்தலம். இலங்கையில் வாழ்ந்து வரும் ஆதிச் சைவக் குடிமக்களின் பாரம்பரியமான வழிபாட்டுத்தலம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்து வரும் இந்துக்களின் வழிபாட்டுக்குரிய புனிதத் தலமாகத் திருக்கோணேஸ்வரம் இருந்து வருகின்றது. திருக் கோணேஸ்வரத்திலுள்ள இறைவன் பெயர் – கோணேஸ்வரர். இறைவி பெயர் – மாதுமையம்பாள். தீர்த்தம் – பாபநாச தீர்த்தம். தலவிருட்சம் – கல்லால். மூர்த்தி, தலம், தீர்த்த விசேடங்களைக் கொண்டது கோணேஸ்வரம்.

கிறிஸ்துவுக்கு முன் ஆறாயிரம் ஆண்டளவில் இலங்கையை இராவணன் ஆண்ட வரலாறு இராமாயண காவியத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இராவணன் வழிபட்ட தலம் திருக்கோணேஸ்வரம் என்ற வரலாறு புராண, இதிகாசங்களிலும் தேவாரங்களிலும் பேசப்படுகின்றன. இராவணன் தனது தாயாரின் வழிபாட்டிற்காக லிங்கத்தைப் பெறுவதற்கு இங்கு தவம் செய்தான் என்றும் தெட்சண கைலாயபதியாகிய கோணேசப் பெருமான் அவனுடைய தவத்திற்கிரங்கிக் காட்சி கொடுக் காததால் அகங்காரம் கொண்ட இராவணன் தென்கயிலையை வெட்டிப் பிளந்தான் என்ற வரலாற்றுக்கு எடுத்துக் காட்டாகக் கோணேசர் கோவிலுக்குப் பக்கத்திலேயே "இராவணன் வெட்டு" என்ற மலைப்பிளவு காணப்படுகின்றது. "இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல் மேல் தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்" என்ற தேவாரப்பாடல் இதனை உறுதிப்படுத்துகின்றது. "எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்" என்று ஞானசம்பந்தர் அருளிச் செய்த ஸ்தலத் தேவாரமும் இந்த வரலாற்றை உறுதிப்படுத்துகின்றது. இராவணன் தனது தாயாருக்கு அந்தியக் கிரியைகள் செய்வதற்காக உண்டாக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க கன்னியாய் வெந்நீர் ஊற்றுக்கள் ஏழும் திருக்கோணேஸ்வரத்தில் இருந்து ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் இருப்பதைக் காணலாம். இந்த வெந்நீர் ஊற்றுக்களை இந்துக்கள் புனித தீர்த்தமாகக் கருதி அந்தியக் கிரியைகள் செய்வதற்குப் பாரம்பரியமாகப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

சிறப்புவாய்ந்த இந்தச் சிவஸ் தலத்தில் இருந்த கோணேசர் கோவிலை கி. பி. 1624 ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் இடித்தழித்து அந்தக் கற்கோவிலில் இருந்த கற்களால் "பிறடறிக் கோட்டையை"க் கட்டியிருக்கின்றார்கள். கோட்டை வாசலிலே இரட்டை மீன் இலட்சினையுடன் "முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியை " என்று தொடங்கும் பாடல் பொறிக்கப்பட்ட கற்றூண்கள் இன்றும் காணப்படுகின்றன. கோவிற் தூண்கள் பல கோட்டையின் உட்புறத்தில் வைத்துக் கட்டப் பட்டிருக்கின்றன. சிற்ப, சித்திரங்கள் பொறிக்கப்பட்ட கோவில் வாயிற் படிக்கற்கள் முதலியனவற்றைப் பயன்படுத்திக் கோணேசர் கோவிலின் மேற்குப் பக்கத்தில் படகுகளை அணைக்கப் பயன்படுத்தும் மேடையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக் கீசர் கட்டியிருந்தார்கள். கோட்டைச் சுவரைப் பிரித்து ஆராய்ந்தால் கோணேசர் கோவில் வரலாற்றுச் செல்வங்கள் கிடைக்கும். கோணேசர் கோவிலை இடித்தழித்த போர்த்துக்கீசத் தளபதியாகிய *கொன்ஸ்ரன்டைன்டிசா* என்பவன் போர்த்துக்கல் அரசனுக்கனுப்பிய அறிக்கையொன்று லிஸ்பன் நகரத்திலுள்ள "அஜூடா" நூல் நிலையத்தில் இருக்கின்றது. அந்த அறிக்கையில் (51ம் பக்கம் VIII – 40) மனுராசா அல்லது மாணிக்கராசா என்னும் மன்னன் இலங்கையை ஆண்டான் என்றும் அவன் கி. மு. 1300 ஆம் ஆண்டு கோணேசர் கோவிலைக் கட்டினான் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இலங்கையை அரசாண்ட போர்த்துக்கீசத் தளபதிகளின் பதிவேடுகளில் திருக்கோணேஸ்வரத்தை அழித்த *கொன்ஸ்ரைன்டைன்டிசா* வரைந்த படங்களும், கோவிலின் நீள அகல எல்லைகளும், குறிப்புகளும் காணப்படுகின்றன. அவனால் அழிக்கப்பட்ட ஆலயத்தின் பரப்புத் தரப்பட்டிருக்கின்றது. கோவிலமைந்த நிலத்தின் நீளம் 600 பாகம், அகலம் 80 பாகம், என்றும் அது ஒடுங்கி ஒடுங்கிச் சென்று 30 பாகமாக அமைந்திருந்தது என்றும் குறிப் பிடப்பட்டுள்ளது. இக்கூற்றின்படி தற்போது ஆலயம் அமைந்திருக்கும் கோட்டைப் பகுதி முழுவதும் ஆலயப் புனிதப் பிரதேசமாயிருந்தது என்பதை அறியலாம். எனவே இற்றைக்கு நாலு நூற்றாண்டுக்கு முன் இப்பொழுது பிரடறிக் கோட்டை அமைந்திருக்கும் நிலப்பரப்பு முழுவதும் கோணேசர் கோவிலுக்குரியதாய் இருந்தது என்பதைப் போர்த்துக்கீசரின் பதிவேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

கலாநிதி போல் ஈ. பீரிஸ் என்பவர் எழுதிய இலங்கை என்னும் நூலின் இரண்டாம் தொகுதி 168ம் பக்கத்தில் கூறப்படுவதாவது: கி. பி. 1624ம் ஆண்டில் கோடை காலத்தில் (சித்திரை மாதம்) "டீசா" என்பவன் கோணேசர் கோவிலை அழிக்கும் காரியத்தில் ஈடுபட்டான். கோணேசர்மலை பட்டணத்தோடு தொடர்புபட்டுக் கடலுக்குள் நீண்டு கிடக்கின்றது. அப்பகுதியில் மூன்று கோவில்கள் இருந்தன. ஒன்று மலையடிவாரத்திலும் அடுத்தது மலையின் நடுப்பகுதியிலும் இருந்தது, கடல் மட்டத்தில் இருந்து 400 அடி உயரமான மலை உச்சியில்தான் மிகப் பிரபல்யமான மூன்றாவது கோயில் இருந்தது. இங்கிருந்த கோவிலை அழித்து முக்கோண வடிவமான கோட்டையைக் கட்டினார்கள்.

போர்த்துக்கீசச் சரித்திர நூலாசிரியராகிய டீ. *குவைறோஸ்* பாதிரியார் எழுதிய நூலின் இரண்டாம் பாகம் 236 ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது: "கிழக்கின் ரோமாபுரியாக இவ்வாலயம் விளங்குகின்றது. *பூரிஜெகந்நாத்* ஆலயத்திற்கும் இராமேஸ்வரத்திற்கும் போய்த் தரிசனம் செய்துவரும் யாத்திரிகர்களிலும் பார்க்க மிக அதிகமான யாத்திரிகர்கள் இவ்வாலயத்தை தரிசித்து வருகின்றார்கள். திருகோணமலைத் துறைமுகத்தின் தரைப்பகுதியில் இருந்து கடலுக்குள் நீண்டிருக்கும் மலையின்மேல் இலங்கை மன்னர்கள் மூன்றா லயங்களைக் கட்டியிருந்தார்கள். அவற்றில் இரண்டு கோவில்கள் மலையின் இரண்டு அந்தங்களிலும் மற்றது இடைநடுவிலும் கட்டப்பட்டிருந்தது. கடலினுள் நீண்டிருக்கும் மலைப்பகுதியின் மிக உயரத்திலிருந்த ஆலயமே இந்திய நாட்டு இந்துக்களாலும் மிக முக்கியத்துவங் கொடுத்துப் போற்றி வணங்கப்பட்டுவந்த ஆலயமாகும். கி.பி. 436 ஆம் ஆண்டு மனுநீதிகண்ட சோழ மன்னனின் பரம்பரையில் வந்த வராமதேவனின் மகனாகிய குளக் கோட்டு மன்னன் சோழ நாட்டிலிருந்து திருக்கோணமலைக்கு வந்து கோணேசர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தானென்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. குளக்கோட்டுமன்னன் செய்த மாபெருந் திருப்பணிகளாகிய குளமும், கோட்டமும் (கோவில்) எடுத்த சிறப்பினால் அவனுடைய இயற்பெயர் மறைந்து "குளக்கோட்டன்" என்ற சிறப்புப் பெயரே நிலைத்து விட்டது. குளக்கோட்டுமன்னன் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்ததைக் கூறும் கோணேசர் கல்வெட்டிலுள்ள அறுபது பாடல்களில் ஒன்று இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருந்து கலிபிறந் தைஞ்ஞூற்றொருபதுடன்*
*இரண்டாண்டு சென்றபின்னர்*
*புரிந்திடப மாதமதி வீரைந்தாந்தேதி திங்கள்*
*புணர்ந்த நாளில்*
*தெரிந்தபுக ழாலயமுஞ் சிகரமுங் கோபுரமுந்*
*தேரூர் வீதி*
*பரிந்து ரத்ன மணிம்திலும் பாபநாசச் சுனையும்*
*பகுத்தான் மேலோன்*

மேலே கூறப்பட்ட பாடலைத் தவிர, கோட்டை வாயிற் கற்றூணில் பொறிக்கப்பட்டிருக்கும் பின்வரும் பாடல் குளக் கோட்டு மன்னனுடைய திருப்பணியையும் அதன் அழிவையும் கூறுகின்றது.

*முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்*
*பின்னே பறங்கி பிரிக்கவே – மன்னாகேள்*
*பூணைக்கண் செங்கண் புகைக்*
*– கண்ணனாண்டபின்*
*மானே வடுகாய் விடும்.*

குளக்கோட்டு மன்னன் கோணேசர் கோவிலில் புனருத்தாரணத் திருப்பணிகள் செய்து, கோவிலைப் பரிபாலனம் செய்வதற்காக மருங்கூரிலிருந்தும் காரைக்காலிலிருந்தும் குடி மக்களைக் கொண்டு வந்து குடியமர்த்தினான். கோவிலைத் தயாரிப்பதற்கு நிரந்தர வருவாயை ஏற்படுத்துவதற்காக 2700 அவணம் நெல்விதைப்புத் தறையை உண்டாக்கினான். இந்த விளைநிலத்தை நீர்ப்பாய்சுவதற்காக அல்லைக்குளம், வெண்டரசன்குளம், கந்தளாய் குளங்களைக் கட்டுவித்தான். இம்மாபெருந் திட்டத்தைத் தர்மநெறி தவறாமல் பரிபாலிப்பதற்காக கனகசுந்தரப் பெருமாள், தனியுண்ணாப் பூபால வன்னிமைகளாகிய முகாமைகளை நியமித்தான். கோவிற் பூசைகளைச் சிறப்பாக நடத்துவதற்கு வேதநாயக முதன்மை, சைவ நாயகமுதன்மை என்ற குருமாரை நியமித்தான். கோவிற் தொழும்பாளர்களை நியமித்து அவர்களுக்குரிய கடைமைகளையும் கொடுத்து மானியங்களும் வழங்கினான். இந்த விபரங்கள் யாவும் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது.

ஏழாம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருக் கோணேஸ்வரத்திற்குத் தேவாரத் திருப்பதிகம் பாடியருளினார்.

*நிரைகழலரவம் சிலம்பொலியலம்பும் நிமலர்*
*நீறணி திருமேனி*
*வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த வடிவினர்*
*கொடியணிவிடையர்*
*கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்*
*அளப்பருங்கனமணி வரன்றிக்*
*குரைகடலோதம் நித்திலங் கொளிக்குங்*
*கோணமாமலை யமர்ந்தாரே.*

என்ற தேவாரத்தை முதலாகவுடைய பத்துப் பாடல்கள் அவரால் பாடப்பட்டிருக்கின்றன.

திருநெய்த்தானம் என்ற திருத்தலத்தைத் திருநாவுக்கரசர் பாடும்போது "தக்காரடியார்க்கு" என்ற திருத்தாண்டகத்தில் "தெக்காரும் மாகோணத்தானே" என்று திருக் கோணேஸ்வரத்தை நினைத்து பாடியருளினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய "நிறைக்காட்டானே நெஞ்சத்தானே" என்ற ஊர்த்தொகைத்திருப்பதிகத்தில் "மறைக்காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே" என்று திருக் கோணேஸ்வரத்தை நினைத்துப் பாடியுள்ளார். பட்டணத்துப்பிள்ளையார் பாடியருளிய திருவேகம்ப முடையார் திருவந்தாதியில் "முக்கோணம் தொடர்கடுக்கை மலையன்வாழ் திருவாலங்காடு ஏகம்பம் வாழ்த்துமினே" என்று திருக்கோணேஸ்வரத்தை முக்கோணம் என்று வைத்துப் பாடியுள்ளர். மூன்று கோணமாயமைந்த மலைகளையுடைய காரணத்தால் இத்தலம் திரிகோணமலையெனவும் வழங்கி வருகின்றது. திரிகோணமலை அந்தாதி என்ற நூலை திரு சி. ஆறமுகப்புலவர் இத் தலத்திற்குப் பாடியுள்ளார். தட்சண கயிலாய புராணம், திருக்கோணாசல புராணம், தெட்சண கயிலாய மான்மியம், திருக்கோணாசல வைபவம், கோணேசர் கல்வெட்டு என்பன இத்தலத்துக்குரிய பழைய நூல்கள். பிற்காலத்தில் இத்தலத்தைப் பற்றிய ஆய்வு நூல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றுள் கலாநிதி செ. குணசிங்கம் அவர்கள் எழுதிய "கோணேஸ்வரம் " புலவர் வை. சோமாஸ்கந்தர் எழுதிய திருக் கோணேஸ்வரம் என்பன குறிப்பிடத்தக்கன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புராணம் பாடியருளிய சேக்கிழார் சுவாமிகள்.

*"ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் என்ற பாடலில்*
*மன்னுதிருக்கோணமலை மகிழ்ந்த செங்கண்*
*மழவிடையார் தமைப் போற்றி வணங்கிப் பாடி"*

என்று திருக்கோணேஸ்வரத் தலத்தைப் பாடி நினைவுறுத்துகின்றார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாத சுவாமிகள் "விலைக்கு மேனியில் அணிக்கோவை மேகலை" என்று தொடங்குந் திருப்புகழிலே,

*நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்*
*திருக்கொணாமலை தலத்தாரு கோபுர*
*நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில்*
*– வருவோனே"*

என்று திருக்கோணேஸ்வரத்தை நினைந்துருகிப் பாடியுள்ளார். குருநமச்சிவாய தேசிகர் அருளிய நமச்சிவாய மாலையில் "கோணமாமலையில் வாழும் கோதிலா ஆதியே நீ ஆணிலைப் பெண்ணுமில்லை அத்தனே நமச்சிவாய" என்று கோணேஸ்வரத்தைப் பாடியுள்ளார்.

சேர் எமேசன் ரெனற் என்பவர் எழுதிய இலங்கைச் சரித்திரம் இரண்டாம் பாகம் 484 – 485 ஆம் பக்கங்களில் பின்வரும் விபரங்கள் காணப் படுகின்றன. "கி. பி. 1639 ம் ஆண்டில் டச்சுக்காரர்கள் திருகோணமலையைக் கைப்பற்றிக் கோணேசர் கோவிலில் மிகுதியாக வுள்ள கற்களையும் தூண்களையும் இடித்து ஆலயத்தின் ஏனைய பொருட்களையும் எடுத்துக் கோட்டை கட்டப் பயன்படுத்தினார்கள். இங்குள்ள சில இடங்களுக்கு டச்சுப் பெயர்களையும் சூட்டினார்கள். இவ்வாறு இவர்கள் கொள்ளையடித்து ஆலயத்தைச் சிதைத்துப் பொருட்களைச் சூறையாடிய போதிலும் இந்துக்கள் இவர்களுக்கு ஒளித்து மறைந்து இந்த இடத்தில் தங்கள் வணக்கத்தைச் செலுத்தி வழிபட்டு வந்தார்கள்".

போர்த்துக்கீசர் கோணேசர் கோவிலை இடித்தழித்த காலத்தில் ஆலயத்தில் இருந்த குருமாரும் பக்தர்களும் ஆலய விக்கிரகங்கள் அன்னியருடைய கையிலகப்படாமல் எடுத்துச் சென்று நிலத்தை அகழ்ந்து அவற்றினுள்ளும், கிணறு, குளங்களிலும் புதைத்து மறைத்து வைத்திருந்தார்கள். அவற்றில் பிள்ளையார், கோணேசர், மாதுமையம்பாள், போகசக்தி, சந்திரசேகரர், அன்னம் என்பன இறைவனுடைய திருவருட் செயலால் 1950 ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டன. அதன் பின்னர் தற்போதிருக்கும் புதிய ஆலயம் கட்டப்பட்டு இம்மூர்த்திகள் பிரதிஷ்ட செய்யப்பெற்று 1963 ஆம் ஆண்டு புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 25.01.81 இல் மேலும் பலதிருப்பணிகள் செய்யப்பெற்று புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கின்றது. போர்த்துக்கீசர் இடித்தழித்த ஆலயத்திலிருந்த சில விக்கிரகங்களில் சிதைந்த பகுதிகள் மலையடிவாரத்திற் கடலினுள் கிடக்கின்றன. அவற்றில் ஊனப்பட்ட லிங்கம் ஸ்ரீ நாராயணமூர்த்தி, மகாலெட்சுமி, கோஷ்டத்திலுள்ள சிதைந்த பகுதிகள், சிலாசாசனச் சிதைவுகள் என்பன ஆலயத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஆங்கிலேயராட்சிக் காலத்தில் கி. பி. 1890 ஆம் ஆண்டு மத்திய மாகாண அரசாங்க அதிபராயிருந்த ஹென்றி டபிள்யூ. கேவ் என்பவர் எழுதிய இலங்கை என்னும் சரித்திர நூலில் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். "திருக்கோணமலையில் கடலுக்குள் நீண்டிருக்குங் குன்று மிகப் பழமை வாய்ந்ததும், மனத்தைக் கவரக்கூடிய வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டதுமாகும். குறிப்பிட்ட குன்று கடலினுள்ளிருந்து எழுந்து 400 அடி உயரத்தில் அழகுற நிமிர்ந்து நிற்கின்றது. இந்துக்களின் வரலாற்றுச் செல்வங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. புத்தர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே இந்துக்கள் இதைப் புனித இடமாகப் போற்றி வந்துள்ளார்கள். தங்களைப் பிராமணர் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு சாரார் (ஆரியர்) தென்னிந்தியக் கலைச் சிற்பங்களைக் கொண்டதாக விளங்குகின்ற தூபி, கோபுரம் என்பனவற்றையுடைய தாக ஆலயங்களைக் கட்டியிருந்தார்கள். இவ்வாலயம் ஆயிரங்கால் மண்டபத்தையுங் கொண்டிருந்தது. போர்த்துக்கீசர் இக்கோவிலை இடித்தழித்தபின் இப்பொழுது அந்த இடம் வெற்றிடமாகக் காட்சியளிக்கின்றது. போர்த்துக்கீசரின் அக்கிரமத்திற்கு எடுத்துக் காட்டாக இப்பொழுது

235.1 THI AR

ARCHIVES 189672

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விளங்குகின்றது. இதனைப் பார்த்தால் யாரும் வருத்தப்படாமலிருக்க முடியாது. ஒரு சிறு காரணமுமில்லாமல் இவ்வாலயம் அழிக்கப்பட்டு விட்டது. எனினும், இந்துக்கள் அந்த வெற்றிடத்தைச் சிவவழிபாட்டுத் தலமாக மதித்து வழிபட்டு வருகின்றார்கள் தெய்வ நிந்தனைக்குரியதும், வருத்தத்திற்குரியதுமான செயலை பதினேழாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் செய்த போதிலும் இன்னமும் அந்த இடம் புனிதமும் மேன்மைக்குரிய வழிபாட்டுத் தலமாகவுமிருந்து வருகின்றது.


போர்த்துக்கீசர், ஒல்லாந்தர்களாகிய அன்னியராட்சிக் காலத்தில் தற்போதுள்ள பிறட்றிக்கோட்டை அவர்கள் வசமிருந்ததால் இந்துக்களின் மத சுதந்திரமும், வழிபாட்டுச் சுதந்திரமும் மறுக்கப்பட்டு வந்தன. பிரித்தானிய ஆட்சியாளர்கள் திருக்கோணேஸ்வரத்தின் தொன்மையையும், தெய்வீகச் சிறப்பையும் உணர்ந்து இந்துக்களுக்கு மதசுதந்திரத்தையும் வழிபாட்டுச் சுதந்திரத்தையும் வழங்கியிருந்தார்கள். திருக்கோணேஸ்வரத்தில் அன்னியர் செய்த அனர்த்தங்களுக்கும், அட்டூழியங்களுக்குமுரிய பிரதி பலனை அனுபவித்து விட்டார்கள். மதவழிபாடு, அரசியற் சூதாட்டங்களுக்கும் பொருட் சூறைகளுக்கும் அப்பாற்பட்டது. யாராயிருந்தாலும், எந்த வழிபாட்டுத் தலமாயிருந்தாலும் புனித ஆலயங்களுக்கு ஊனம் விளைவிப்பவர்கள் இன்னலை அனுபவித்தே தீர வேண்டும். இரண்டாவது உலக மகா யுத்தத்தில் திருக்கோணமலையின் மீது ஜப்பானியர் குண்டுகளை அள்ளி வீசினார்கள். கோணேசர்மலையில் நிறுவப்பட்டிருந்த விமான எதிர்ப்புப் பீரங்கிகளுக்கு இலக்கு வைத்து வீசப்பட்ட குண்டுகளில் ஒன்றேனும் கோணேசர் மலையில் விழவில்லையென்பது தெய்வீக அற்புதமாகும்.

கடலினடியில் ஆராய்ச்சி செய்த சேர் ஆதர்சிகிளாக், மைக்வில்சன், றொட்னி ஜொங்க்லஸ் என்பவர்கள் மிகப் பழமை வாய்ந்த ஆலயம் கடலினடியில் அமிழ்ந்திருப்பதாகக் கண்டறிந்தார்கள். பிரமாண்டமான மணியும், விளக்குகள், தூண்கள் கோவிற் தளங்கள் என்பன கடலினடியிலிருப்பதாகப் பத்திரிகையில் பிரசுரித்தார்கள். இந்தக் கோவில் கடல்கோளினாலழிந்த கோவிலாயிருக்கலாம். குளக்கோட்டு மன்னன் திருப்பணி செய்த கோணேசர் கோவில் இருந்த காலத்தில் திருக்கோணமலை மாவட்டத்தில் கங்கைவேலி சிவன்கோவில், திருமங்கலாய் சிவன்கோவில் அகஸ்தியர் ஸ்தாபனம் கந்தளாய் சிவன்கோவில், கட்டளைப் பிள்ளையார் கோவில் என்பனவும் சிறப்புற்று விளங்கின. தற்போது கோணேஸ்வரத்தைச் சூழ்ந்து ஸ்ரீ பத்திரகாளியம்பாள் கோவில், ஆலடிப் பிள்ளையார் கோயில், வில்லூன்றிக் கந்தசாமி கோயில், முத்துக்குமாரசுவாமி கோயில், விஸ்வநாதசுவாமி சிவன்கோவில்,வீரகத்திப் பிள்ளையார் கோவில், மாரியம்மன் கோவில், ஸ்ரீ கிருஷ்ணன் கோவில், சமாதிப்பிள்ளையார் கோவில், சனீஸ்வரன் கோவில், நடேசர் கோவில் முதலிய பல ஆலயங்கள் நிறைந்து திருக்கோணமலை தெய்வத் திருவருட் சிறப்போடு விளங்குகிறது.

ஆதியந்தமில்லாத இறைவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் இந்துக்களின் புனித தலம் திருக்கோணேஸ்வரம். இலங்கை வாழ் இந்துக்களாலும், சிறப்பாகத் திருக்கோணமலைச் சைவப் பெருமக்களாலும் புனராவர்த்தனத் திருப்பணிகள் செய்து அமைக்கப்பட்ட கோணேசர் கோவிலை இப்போது தரிசிக்கும் பாக்கியம் பெற்றுள்ளோம். கருவறையில் காசியிலிருந்து கொண்டுவரப்பெற்ற சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கின்றது. நிலத்திலிருந்து கிடைத்த மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானும் ஏனைய பரிவார மூர்த்திகளும் ஸ்தாபிக்கப்பட்டு குளக்கோட்டு மன்னனுடைய காலத்தில் நடைபெற்று வந்த மகோற்சவங்களும், பாபநாசத் தீர்த்தோற்சவமும், தெப்பத் திருவிழாக்களும், சிவராத்திரியை அடுத்து தொடர்ந்து மூன்று நாட்கள் நகர்வலமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்தலத்தில் நடைபெற்ற அற்புதங்களை தலபுராணங்கள் வாயிலாக அறியலாம். திருக்கோணமலை மாவட்டம் கோணேசப் பெருமானுடைய திருவருளாட்சிக்கு உட்பட்டது. அதனால் திருகோணமலை மக்களின் வாழ்க்கையில் இந்து சமயப் பண்பாடு, பழக்க வழக்கம், கலை, கலாச்சாரம் என்பன பின்னிப் பிணைந்து கிடப்பதைக் காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணன் வெட்டு



இலங்கை மன்னன் என்று சிறப்பிக்கப்பட்டவனும், சிவபக்தனுமாகிய இராவணன் வழிபாடு செய்துவந்த கோணேஸ்வரத்தில் பக்தி வைராக்கியத்தின் சின்னமாக விளங்குவது இராவணன் வெட்டு. இராவணனின், சிவபக்திக்கும், தவ வலிமைக்கும், வீரத்திற்கும் எடுத்துக்காட்டாயுள்ள அழியாத முத்திரை அது. கடல் மட்டத்திலிருந்து 400 அடி உயரமான குன்றில் கோணேசர் கோயிலுக்கருகே, கிழக்குப் பக்கமாக இந்த இராவணன் வெட்டுக் காணப்படுகின்றது.

தனது தாயார் வழிபாடு செய்வதற்காக உத்தர கயிலைக்குச் சென்று தவஞ்செய்து பெற்றெடுத்த லிங்கத்தை இழந்து விட்ட இராவணன், நாரதரின் அறிவுரைப்படி தெட்சண கயிலாயமாகிய திருக்கோணேஸ்வரத்திற்கு வந்து மீண்டும் ஒரு லிங்கத்தைப் பெறுவதற்காகக் கடுந்தவம் புரிந்தான். இறைவன் தவத்திற்கு இரங்காமை கண்டு பக்தி வைராக்கியத்தினால் அகங்காரங்கொண்டு கோணேசர் அமர்ந்துள்ள குன்றையே வெட்டிப் பிளந்து எடுத்துச்செல்ல முனைந்தான். அதற்காக அவன் வெட்டிய அடையாளந்தான் இராவணன் வெட்டு. இந்த வரலாற்றைத் தெட்சணகயிலாயபுராணம் கூறுகின்றது.

*"எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்*
*ஏத்திட ஆத்தமாம் பேறு கொடுத்தவர்"*

கோணேசப் பெருமான் என்று மேலே கூறிய வரலாற்றைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கோணேஸ்வரத்தலத் தேவாரத்தில் கூறுகின்றார்.

*"வண்டமரோதி மடந்தை பேணின*
*பண்டை இராவணன் பாடி உய்ந்தன*
*தொண்டர்கள் கொண்டு*
*துதித்தபின்னவர்க்கு*
*அண்டமளிப்பன அஞ்செழுத்துமே."*

என்று சீர்காளிபெற்ற ஞானக்குழந்தையாகிய ஞானசம்பந்தர் இராவணனுடைய சிவபக்தியை விதந்து பேசுகின்றார் தேவாரத்தில். வண்டமரோதி என்பது உமையம்மையார். இதனை இராவணன் தேவி மண்டோதரி என்றும் கூறுவர். பஞ்சாட்சரத்தை ஓதிச் சாமகானம் பாடிய இராவணனுக்கு இரங்கிய இறைவன் நாளும், வாளும் கொடுத்தாரென்று தேவாரமும், தெட்சணகயிலாய புராணமும் கூறுகின்றது. இத்தகைய சிவபக்திச் செம்மலாகிய இராவணன் வைத்த அழியாத அடையாளந்தான் இராவணன் வெட்டு. இது இன்று இந்து சமயத்தவர்களின் வரலாற்றுச் சின்னமாகவும், சுற்றுலாப் பயணிகளின் அற்புதச் சின்னமாகவும் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோணேசர் ஆலயத்தின்
ஐம்பது அடி ஆழமான
புராதன கிணற்றைப்
புனருத்தாரணம்
செய்யும் பொருட்டு
பூசை நடத்தி அதற்கு
கோயில்தலைவர்
மு.கோ.செல்வராசா
கும்பம் சொரியும் காட்சி



கோவிலின் புராதான
அபிஷேகக்
கிணற்றை சிவநேய
அடியார்கள்
துப்புரவாக்கி
புனருத்தாரணம்
செய்கிறார்கள்.



கண்டாமணிக்
கோபுரத்திற்கு அடிக்கல்
நாட்டும்
வைபவத்தின் ஆரம்பக்
கிரியைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டாமணிக்
கோபுரத்திற்கு அடிக்கல்
நாட்டும் வைபவம்.




மணிக்கோபுர உபயகாரர்
திரு.கணேஸ் கீர்த்திதாஸ்
அவர்கள் அடிக்கல்
நாட்டும் போது எடுத்த
படம், 15-03-1997



கண்டாமணிக் கோபுர
அடிக்கல் நாட்டும்
வைபவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டாமணிக்கோபுர அடிக்கல் நாட்டும் வைபவத்தில் மக்களின் ஒரு கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்கள்மீது அன்பு கொள்



பசுவைத் தெய்வமாக வழிபடுகிறோம். அதற்குப் பொங்கல் செய்கிறோம். பொட்டிட்டு மாலை போடுகிறோம். அதன் சாணியை விபூதியாக்கி சமயச் சின்னமாக அணிந்து கொள்கிறோம். எருத்து மாடுகளை வயல் உழவும் வண்டி இழுக்கவும் உபயோகப்படுத்துகிறோம்.

தாய்ப்பால் இல்லாத குழந்தைகளை பசுத்தாய் தானே பால் கொடுத்து வளர்க்கிறது. நோயாளிகளையும் முதியோர்களையும் கூடப் பால் கொடுத்துக் காப்பாற்றுகின்றது. வெளிநாடுகளில் இருந்து இலட்சக்கணக்காக வந்து சேரும் பால்மாப் பெட்டிகளும் பசுக்களின் கொடைகளே.

பசு சாதுவான மிருகம் என்று எல்லோரும் சொல்லுவார்கள். கொம்பிருந்தாலும் அது மனிதரை இடிப்பதில்லை. மனிதன் கொம்பில்லாமலே மற்ற மனிதர்களை இடிக்கின்றான், கொலையும் செய்கின்றான். மனிதன் மிருகமாக மாறிவிட்டான். பசு சாதுவான பசுவாகவே இருக்கிறது.

பசுவும் கடினமாக உழைக்கும் எருதும் குதிரையும், யானையும், ஆடும், மானும் இன்னும் பல மிருகங்களும் தாவர உணவையே உண்கின்றன. பலமான வேலைகளைச் செய்கின்றன. மனிதன் பலத்துக்காக உண்பதாகப் பொய்யைச் சொல்லிக் கொண்டு நாக்கின் சுவைக்கு அடிமைப்பட்டு வாய்க்கு உருசிக்காக ஆடு, மாடுகளையும் மாமிச உணவுகளையும் சாப்பிடுகின்றான். புத்தி சாதுரியத்தினால் தான் உண்பது சரி எனவும் வாதிக்கிறான். இன்னும் மேலே போய் கடவுள் தன்பக்கம் தான் என்றும் சொல்லித் தன்னையே ஏமாற்றுகின்றான்.

மனிதத்தன்மை, மனிதப்பண்பு, உள்ளவன் தான் மனிதன். மனிதன் எந்த உயிரையும் கொல்ல மாட்டான். மற்றவர் மனம் நோக நடக்க மாட்டான். மாமிச உணவை உண்ணமாட்டான். கோயிலை வழிபட்டு விட்டு நேரே இறைச்சிக் கடைக்குப் போகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்காக இரக்கப்பட்டு இவர்களுக்கு நல்லறிவைக் கொடுக்கும் படி இறைவனைக் கேட்டுக் கொள்வோம்.

சைவ சமயத்தவர்கள் மாமிசம் புசிக்கக் கூடாது. சொந்த வீட்டில் எதையாவது செய்து பாவத்தைத் தேடிக் கொள்ளாதீர்கள். பொது விருந்துகளில் மாமிசத்தைச் சேர்த்துக் கொள்ளாதீர்கள். சைவ விருந்தாக நடத்துங்கள் என்று பல அன்பர்களிடம் பல சந்தர்ப்பங்களில் பணிவாகக் கேட்டுக் கொண்டேன். எவரும் இணங்கியபாடில்லை. அதற்கேற்ற துணிவும் இல்லை. அதில்லாமல் என்ன விருந்து என்று கேட்டவர்களும் உண்டு.

வேதநூல்கள், சமயநூல்கள், நீதிநூல்கள், புராண இதிகாசங்கள் எல்லாமே உயிர்க் கொலையையும் மாமிச உணவையும் கண்டித்துள்ளன. எல்லா ஜீவராசிகளும் கடவுளுடைய பிள்ளைகள். அவைகளிடம் அன்பு காட்ட வேண்டும்.

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்.*

*தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூனுண்பானை*
*எங்ஙனம் ஆளும் அருள்*

*– திருக்குறள்*

*காப்பது விரதம் (உயிர்வதை செய்யாமல்*
*காப்பது நோன்பாகும்)*

*– ஆத்திசூடி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நோன்பு என்பது கொன்று தின்னாமை*
*(மற்ற உயிர்களைக் கொன்று அதன்புலாலை உண்ணாமல் இருப்பதே விரதம் ஆகும்.)*
*– கொன்றை வேந்தன்*

*புலையும் கொலையும் களவுந்தவிர்*
*(புலால் உணவு, உயிர்க் கொலை, திருட்டுத் தொழில் இவற்றை ஒழித்து விடுவாயாகா.)*
*– கொன்றை வேந்தன்*

*கொல்லாமை எத்தனை குணக் கேட்டை நீக்கும்.*
*கொல்லா விரதாங் குவலயமெல்லா மோங்க*
*எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை*
*பராபரமே*

*எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணியிரங்கவும் நின்*
*தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே*

*கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்*
*றல்லாதோர் யாரோ அறியேன் பராபரமே*

*கொலைகளவு கட்காமங்கோபம் விட்டால் அன்றோ*
*மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே.*
*– தாயுமானசுவாமிகள்*

*கொலை புரிவார் தவிர மற்றரெல்லாம் நமது*
*குலத்தவரே*
*–இராமலிங்க சுவாமிகள்*

*கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்*
*– உலகநீதி*
*ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே*
*– ஆன்றோர் வாக்கு*

### பாவங்கள் ஆவன யாவை?

கொலை, களவு, கள் குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், வியபிசாரம், சூதாடுதல் முதலானவை கொலை பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகும்.
*–ஆறுமுக நாவலர் பெருமான்*

பசுவதை, பகிடிவதை, சித்திரவதை, மனித வதை இப்படி எத்தனையோ வதைகள் உள. எல்லாம் மனித குலத்தால் செய்யப்படுபவை. காரணம் அறியாமை. இவற்றைத் தவிர்ப்பதாயின் அறியாமையில் புதையுண்ட பாமர மக்களிடையே அறிவையும் ஆத்மீகத்தையும், ஞானத்தையும், நீதியையும் புகட்ட வேண்டும். மகாத்மா காந்தியடிகள் மேல்நாடு சென்ற போது தாயார் மூன்று சத்தியங்களைக் கேட்டு வழியனுப்பினார்கள். காந்தியடிகள் மூன்று சத்தியங்களையும் காத்துத் தாய் நாடு திரும்பி சேவை செய்து மகாத்மா எனப் போற்றப்பட்டார்கள். மூன்று சத்தியங்களாவன மது அருந்த மாட்டேன். மாமிசம் புசிக்க மாட்டேன். பிற மாதரை விரும்ப மாட்டேன்.

பெற்றார்களும் ஆசிரியர்களும் பின்வருவன போன்ற சத்தியங்களை மாணவர்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மது அருந்த மாட்டோம்
மாமசம் புசிக்க மாட்டோம்
பிற மாதரை விரும்ப மாட்டோம்
எந்த உயிரையும் கொல்ல மாட்டோம்
பசு வதை செய்ய மாட்டோம்
பகிடி வதை செய்ய மாட்டோம்
பொய் சொல்ல மாட்டோம்
களவு எடுக்க மாட்டோம்
கோபங் கொள்ள மாட்டோம்
தெய்வத்தை இகழ மாட்டோம்
தற்கொலை செய்ய மாட்டோம்

அம்மா என அலற ஆருயிரைக் கொன்றருந்தி இம்மானுடரெல்லாம் இன்புற்றிருக்கின்றார். அம்மா எனுஞ் சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும் பொய் மாநிரயமெனில் புசித்தவர்க்கென் சொல்லுவதே சைவ உணவைப் பேணி சைவசமயத்தைக் காப்போம்.

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க*
*ஆனந்தம்*

பொ. கந்தையா காந்தி ஆசிரியர்.

*முத்துக்குமார சுவாமி கோயிலடி,*
*திருக்கோணமலை*
*20.09.98*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கோபுர நிர்மாண சிற்பி: சிற்ப கலாபானு, சிற்ப சாகரம் ஸ்தபதி
கந்ததாஸ் இரவீந்திரராஜா அவர்கள் வழங்கிய

# மணிக்கோபுர நிர்மாணமும், சிற்ப சாஸ்திர விதிகளும்.



**சோமஸ்கந்தர் மூர்த்தி ருப தியானம்**

*சச்சிதா நந்தமான் சராசரன் சோமாஸ்கந்தர்*
*உச்சித உமையாள் ஓர் பால் ஒருமரைமொட்டோடென*
*நிச்சவ அபயமொடு நிர்மல கடகாஸ் தங்கள்*
*அச்சுதன் நடுவனாக அமர்வன்பால் மழுமானேந்தி.*

**சிற்பக்கலை**

உள்ளத்திலே எழும் தோற்றத்தை உருவத்திலே வடித்துப் பார்க்கும் கலை சிற்பக்கலை

**ஆலயச் சிற்பக் கலை**

எல்லாம் வல்ல பரம் பொருளைப் பல உருவங்களில் நினைத்து, சாஸ்திரங்களுக்கும், வேதங்களுக்கும் விளக்கம் தந்து, அழகுற அமைத்துத் தருவது ஆலய சிற்பக்கலையாகும்.

நம் ஒப்புயர்வற்ற நுட்பக்கலை தனிச்சிறப்புடையது. அது இறைவன் வழிபாட்டோடு இணைக்கப்பட்டது நம் கலைகளெல்லாம் நம் கோவில்களோடு வளர்ந்து வந்திருக்கின்றன. இறை பக்தி என்ற நீரும், உரமும் இட்டு ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆலயங்களும், அங்குள்ள இறைவனின் திருவுருவங்களும் கலைவளர்ச்சியுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கென நம் முன்னோர்கள் சாஸ்திரங்களை வகுத்திருக்கின்றார்கள். இவ்வாறு உருவாக்கப் பட்டு பூசையிலுள்ள விக்கிரகங்களும், ஆலயங்களும் அருள் தேக்கி வைக்கும் அமுதசுரபிகளாகும். ஆலயங்களில் நடைபெறும் ஒவ்வொரு கிரியைகளும் இறையருளைச் சேர்க்கும் வழிகளாகும். இக்கிரியைகளுக்கு முக்கியமானது கண்டாபூசையாகும்.

பாரார்தா ஆலயங்கள் யாவும் கிராம, நகர மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக உருவாக்கப்பட்ட அருள் நிலையங்களாகும். இவ்வாலயங்கள் யாவிலும் பெரிய கண்டாமணி, உயர்ந்த மணிக்கோபுரங்களில் அமைத்து கிராம, நகரங்களில் அதன் ஒலி ஓங்காரமாக ஒலிக்கவேண்டி அமைத்தல் சிற்ப மரபாகும். இம் மணி பூசை ஆரம்பம், அபிஷேகங்கள், உற்சவங்கள் போன்றவற்றில் உபயோகிக்க வேண்டும்.

இம்மணிக் கோபுரங்களானவை ஆலயங்களின் பிரகார எல்லைகளை மத்தியாகக் கொண்டு நிர்மாணித்தல் உத்தம பலனாகும். ஒரு கண்டாமணி உள்ள ஆலயங்களில் மூல மூர்த்தியின் இராஜ கோபுரத்திற்கும் வைரவர் ஆலயத்திற்கும் இடைப்பட அமைவதைக் காணலாம். வைரவ மூர்த்தி ஆலயத்தின் காவல் தெய்வமாக (ஷேத்திர பாலகராக) இருப்பதால் அம்மூர்த்தியை பிரகார எல்லையில் ஈசானிய திக்கில் நிர்மாணிப்பது போல் மணிக் கோபுரத்தையும் பிரகார எல்லையில் அமைத்தல் சிறப்பம்சமாகும். பிரகார எல்லையில் மணிக் கோபுரங்களை நிர்மாணித்து, அம்மணியிலிருந்து எழும் ஓங்கார ஓசை துஷ்ட தேவதைகளைப் போக்கி, தேவர்களை வரவழைத்து ஆலயங்களில் நடைபெறும் அபிஷேகம், பூசை, உற்சவங்கள் சிறப்புறவும் திருவருட் சக்தியைத் திரட்டி ஆலய சுற்றாடலில் அருள் நிலைகளைச் செறிய வைக்கும் சக்தி தேவர்களுக்குரியது. தேவர்கள் இல்லாத பூசை முற்றுப்பெறாமலும், பலனற்றதுமாகி விடும். எனவே தான் அபிஷேகம் பூசைகள் நடைபெறும் போது மணிஅடித்தல் முக்கியமாகின்றது. கண்டாமணி கிராம, நகரங்களில் ஒலிக்கின்ற போது அவ்விடங்களில் துஷ்ட தேவதைகள் விலகி, தேவர்கள் வாசம் செய்வார்கள் என்பது ஆகம விதியாகும்.

சில ஆலயங்களில் பிரதான இராஜ கோபுரத்தின் இரு புறமும் மணிக்கோபுரங்கள் அமைவதுண்டு கோணேஸ்வரப் பெருமானின் ஆலயத்தில் ஈசானிய திக்கில் ஏற்கனவே மணிக்கோபுரம் அமைந்துள்ளது. ஆதலினாலும், ஆலயத்தின் இயற்கை அமைப்புக்களைக் கருத்திற் கொண்டும், பல சிற்ப நூல்களின் தெளிவுறு கருத்துக்களின் வழியில் ஆகம சிற்ப சாஸ்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படி நடேசர் வாயிலுக்கும் அம்பாள் வாயிலுக்கும் இடைப்பட மணிக்கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எந்த ஆலயத்திலும் மணிக்கோபுரங்கள் மூல மூர்த்தியின் இராஜ கோபுரத்தின் உயரத்தை விட உயரக் கூடாது என்பதே சிற்ப விதியாகும். மற்றைய கோபுரங்களையோ பிரகார தூபிகளையோ கணக்கீடு செய்வது முறையன்று. எந்த ஒரு கணக்கீடும் மூல மூர்த்தியின் கர்ப்பக்கிரக பொருத்தி அளவிலிருந்து எடுக்கப்படல் வேண்டுமென்பது ஆகம சிற்ப விதியாகும்.

அதைவிடுத்து ஆலய பிரகாரங்களுக்கு வெளியில் மணிக்கோபுரங்கள் அமைப்பதனால் அவை ஆலயத்திற்கான மணிக்கோபுரங்கள் எனவன்றி, கிராமத்திற்கு அல்லது நகரத்திற்கான மணிக் கோபுரங்களாகி விடும்.

மாதுமை அம்பாள் சமேத கோணநாதப் பெருமானின் இத் திருப்பணிகள் யாவும் எம்பெருமானின் அளப்பெரும் திருவருட் துணைகொண்டு பெரியார் ஒருவரின் அருள் வாக்கின் மூலம் கூறப்பட்டு, லண்டனில் வசிக்கும் திரு. அரி மகேந்திரன் அவர்களின் அயராத பணியினாலும், வெளிநாடுகளிலுள்ள சிவனடியார்களின் நிதியுதவியினாலும் சிறந்த நாதம் பொருந்திய, வெண்கல கண்டாமணியை அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

பல தனவந்தர்கள் வாழும் இச்சிவபூமியிலே தானாகவே முன்வந்து இதற்கான மணிக்கோபுரத்தை முழு மனதோடு, இறைபக்தியோடு அமைத்து அம்மணியின் ஓசை நகர மக்களின் செவிகளிலே ஓங்காராமாக ஒலிக்க வேண்டுமென்ற நற் சிந்தனையோடு பணத்தால் மாத்திரமன்றி, ஒவ்வொரு நாளும் வேலைகள் நடைபெறும் பொழுது சரீரத் தொண்டும் நீர் ஆகாரங்களையும் தானாகவே தயாரித்து களைத்தவர்கள் உடலும் உளமும் மகிழும் படியாக பணிசெய்யும் பண்புமிகு தொண்டன் இப்பணி சிறப்புற வேண்டுமென்று சதா எண்ணிய வண்ணம் இறையருள் துணையோடு பல இலட்சம் ரூபா செலவோடு புதிய மணிக்கோபுரத்தை நிர்மாணிப்பதற்கும், அதற்கான கும்பாபிஷேகம், கும்பாபிஷேக மலர் வெளியீடு போன்றவற்றிற்கான பணத்தை தாராள மனத்துடன் கொடுத்துதவிய திரு. கணேஸ் கீர்த்திதாஸ் குடும்பத்தினர் பூர்வீகத்தில் செய்த புண்ணியத்தின் பலனால் இச்சிவப்பணியை முழுமையாகச் செய்யும் பாக்கியம் பெற்றவர்களாயினர். இது மாத்திரமன்றி மேலும் பல பணிகள் செய்யவேண்டுமென்ற ஆர்வம் கொண்டவராகவும் திகழ்வது இறையருளே.

கோணேஸ்வரப் பெருமானின் திருவருளினாலும், கணேஸ் கீர்த்திதாஸ் அவர்களின் தாராள பொருளாதார உதவியினாலும் எம்பெருமானுக்கு சிற்ப சாஸ்திர முறைப்படி இரட்டைப் பஞ்சாங்க வேலை அமைப்புடன், தூபி தளங்களைக் கொண்ட ஏகதள முகபத்திர விமானமும், அமைக்கப்பெற்று அதன் பஞ்சரங்களில் அழகிய வேலை அமைப்புகளுடன், அலங்கார வர்ண வேலைகள் மிளிரும் வகையில் அமைத்து, இதற்கான கலசம் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப் பட்டதும் ஓர் சிறப்பம்சமாகும்.

இவ்வமைப்புகளில் வீற்றிருக்கும் தேவர்களின் விபரங்கள் பின்வருமாறு:

*உப பீடத்தில் வீற்றிருக்கும் தேவர்கள்:*
பூமி தேவி, நந்தீஸ்வரர், பிரம தேவர் ஆகியவற்றின் அம்சமாகும்.

*அதிஷ்டான வர்க்கத்தில் வீற்றிருப்பவை:*
சீதேவி, விஷ்ணு, விநாயகர் முதலிய அம்சமாகும்.

*போதிகை வர்க்கத்தில் வீற்றிருப்பவை:*
அஷ்ட சக்திகள், தபோதனர்கள், ரிஷவந்தர்கள் முதலிய அம்சமாகும்.

*பிரஸ்தளத்தின் வர்க்கத்தில் வீற்றிருப்பவை:*
தேவர்கள், சித்தி வித்தியாதரர், கிண்ணரர், கிண்புருடர் முதலிய தேவர்களின் அம்சாகும்.

இப்பெரும் கைங்கரியம் சிறப்புற பல வழிகளிலும் ஒத்துழைப்பும் சரீரத் தொண்டுகளும் செய்த அன்புமிகு சிவத்தொண்டர்களின் பங்குகள், தன்னலமற்ற இறை பக்தியை வெளிப்படுத்தி நிற்கின்றன. மேலும், இப்பணிகள் சிறப்புற ஆசிவழங்கிய அந்தணப் பெரியார்கள், ஆலோசனை வழங்கிய அறிஞர்கள், கலைமிளிர மனமுவந்து பணிபுரிந்த என் உடன் கலைஞர்கள், எப்பொழுது எப்பொருள் தேவையென அறிந்து அப்பொருளை அக்கணமே சேர்த்துவிடும் பண்புமிகு தொண்டர்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று மங்களமாய் பல்லாண்டு வாழவும், கும்பாபிஷேகம் சிறப்புறவும் நானிலமே போற்றுகின்ற கோணேஸ்வரப் பெருமானின் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி கெங்காரானந்தாஜி அவர்கள் இயற்றிய

# திருக்கோணேசர் பஜனை

இராகம் : காபி தாளம் : ஆதி

மரகதமலை போன்ற தென் கயிலை மாமலையில்
நர்த்தனம் ஆடும் நர்த்தக மணியே
மரகதக்கால் சிலம்பொலி கேட்க திருமலை இறைவா
வந்தேன் உன் தாள் இணைக்கு
வருக வருக என்று வரவேற்று வரம் தந்த வரதநாயகா
வரகுஜி குஜித்தோர் இகருஜி அறியார் சிவனே சிவனே

இராகம் : சகானா

நீராம்பல் பூமணத்தை நீர்வாழ் நீரினம் நுகர்வதில்லை
நீரலையில் கலந்துவரும் சிலம்பொலி நாதத்தை
மூடர்கள் மூடதையால் உணர்வாரில்லை
மூர்த்தி ஸ்தலம் தீர்த்தம் என்ற முப்பெரும் ஸ்தல
பெருமையை உணர்ந்தோர்
மூப்பும் பிணியும் அகற்றி முக்தி இன்பம் அடைவார்
ஐயம் இல்லை என் ஐயனே

இராகம் : சிந்துபைரவி

உளக்கண் திறக்கும் திறவுகோல் இங்குதான்
உண்டுவேறு எங்கும் தேடவேண்டாம்
உச்சிமலையில் தவக்குகையில் உள்ளடக்கி உள்நோக்கி
இருந்தால் அகக்கண் திறக்கும் உண்மை
கோரக்க முனிவர் செய்த தவப்பயனால்
திருமலையில் வந்தமர்ந்த திருமலை தேவா
கொடுமைகளை மாளவைத்து அருள் புரியும்
அருட்பெரும் கருணைக் கடலே

இராகம் : மலஹரி

வேதனையும் சோதனையும் நிறைந்த உயிரோட்டம்
நிற்கும் வேளையில் உயிர்ப்பிக்கவும் இரட்சகனே
வத்சலப்பிரியனே உன் திருத்தாள் மகிமையை
எவ்வாறு எடுத்துரைப்பேன் சின்மயானந்தனே
தெட்சண கயிலைமலை அமிர்தா உன் பொற்பாதத்தை
பத்ர புஷ்பம் தூவிபூஜிக்க அருள்புரிவாய்

இராகம் : மத்யமாவதி

மிலேச்சரால் அழித்தும் அழியாமல் நின்று செங்கதிர்
வீசிநிற்கும் செஞ்சடையவனே
மானசீகலிங்கத்தை மனதால் பூஜை செய்து மௌனமாய்
இருக்கும் மௌனிகளால் அன்றிஉன்னை வேறாரறிவார்
தங்கத் தமிழில் நொந்து நொந்து உருகி உன்
திருப்புகழ் பாடி வாழும் நல்லடியாரை
தங்கப் பாத மலரில் வைத்து அணைத்திடுவாய்
சோபித லிங்க அருள்மணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமிக்கு புதிய மணி ஓசை

-குறளமுதம் விநாயகசோதி



இப்புண்ணிய பூமிக்குத் தலைவனாக வீற்றிருக்கும் கோணநாயகனின் ஆலயத்தில் இருந்து புதிய மணி ஓசை கேட்கப் போவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடையும் நாளே இத்திருநாளாகும். 'ஓம் சிவாயநம' 'சிவாயநம ஓம்' என்னும் ஓங்கார நாதத்தை இப் பூமிதனில் பரப்பி, எல்லோரையும் அருள் பாலிப்பாராக!

தென்கையிலாயம் எனக் கூறப்படும் இப்புனித ஆலயம், திருக்கோணமலையில் அமைந்ததனால் தான் 'சிவபூமி' என்று திருமூலரும், நித்திலம் கொழிக்கும் பூமி என்று ஞானசம்பந்தனும், அப்பரும், சுந்தரரும், சேக்கிழாரும், அருணகிரிநாதரும் பெருமை சேர்த்து பாடியதை நாம் மறத்தலாகாது. இலங்கையில் தோன்றிய மாமுனிவர் யோகர்சுவாமிகள் இன்னும் ஒருபடி மேல் சென்று திருக்கோணமலையில் அடிக் கொருலிங்கம் பூமியில் புதைந்து இருப்பதாகக் கூறிச்சென்றமை இப்புண்ணிய பூமியின் புனிதத்தையும் மகிமையையும் நாம் புரிந்துகொள்ள முற்படவேண்டும். ஆம்! இப்பூமிதனில் வாழ்வதற்குக் கிடைத்தமை நாம் செய்த பாக்கியமே.

கிறிஸ்துவுக்கு முன் 534 ஆண்டுகள், விஜயன் இலங்கைக்கு வரும் போது திருக்கோணேஸ்வரர் ஆலயம் மிகச்சிறப்பாக இருந்ததாக தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் போல் பீரீஸ் கூறியமையை இவ்விடத்தில் ஞாபகம் கூறுவது சிறப்பாகும். மன்னன் இராவணன் வாழ்ந்த காலம் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என இராமாயணத்தில் கூறப்படுகிறது. இராவணனுக்கும் திருக் கோணேஸ்வரத்துக்கும் நிறையத் தொடர்பு இருந்தமையை நாம் அறிவோம். அதற்குச் சான்றாக அர்த்த மண்டபத்தின் மேல் இராவணனை வீற்றிருக்க வைத்திருப்பதும், கன்னியா வெந்நீர் கிணறும் அவனது தொடர்பைத் தெளிவு படுத்துகின்றது.

புண்ணிய பூமி என்று விழித்து ரைக்கப்படுகின்றதே உண்மைதானா? ஓர் பூமி புண்ணிய பூமி என்று அழைக்கப்படும் பொழுது அப்பூமி சகல வளங்களும் கொழித்திருக்க வேண்டியது அவசியம் அல்லவோ!

இப்புண்ணிய பூமி அப்படி வளம் கொழித்திருக்கின்றதா? என்று அலசிப் பார்ப்போம். ஒரு பூமி சகல வளங்களையும் கொண்டதாக அமைய வேண்டுமேயாகில் அது நில வளம் கொண்டதாகவும், நீர் வளம் உடையதாகவும், கடல் வளம் கொண்டதாகவும், மலைவளம் உள்ளதாகவும் அமைந்தால்தான் அது மேற்கொண்டு தேவையான சகல வளங்களையும் ஏற்படுத்தித் தருவதற்குத் துணையாக அமையும்.

இதை திருவள்ளுவப் பெருமான்............

*"மணிநீரும் மண்ணும் மலையும்*
*அணிநிழ காடும் உடையது அரண்".*

என்று கூறியதில் இருந்து ஒரு நாடு எப்படி இருந்தால் எப்படி செழிப்புற்று விளங்கும் என்று கூறியமை துல்லியமாக விளங்குகிறது அல்லவா.

நில வளத்தைப் பார்ப்போம்! கடற்கரைக்கு அருகாமையிலேயே பல வர்க்க காய்கறிகளை உற்பத்தி செய்வதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்காயச் செய்கை பண்ணுவதும், நெல்வயல்களைக் காண்பதும் வேறு எவ்வூரில் காண முடியும். தென்னமரவாடியில் இருந்து வெருகல்வரை இச்செழிப்புறு காட்சியைக் காண முடிகிறது அல்லவா! இலங்கையின் மத்திய பிரதேசத்தில் அதி உயர்ந்த மலையில் இருந்து ஊற்றெடுத்து, பல நூறு மைல்கள் ஓடி மகாவலி கங்கை திருக்கோணமலையை நோக்கி ஏன் வரவேண்டும். ஓர் கங்கை எங்கு வந்து விழுகின்றதோ அப்பூமி செழிப்புறும் என்பது புதுமையல்லவே. மூதூர் என்ற பரந்த செழித்த பூமி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இக்கங்கையினால் ஏற்படுத்தப்பட்ட படுக்கை என்பதைச் சொல்லியா புரிய வேண்டும். மூதூரை போன்ற ஓர் செழித்த பூமியை இலங்கையில் வேறு எங்கு காணமுடியும். திரியாயில் இருந்து பன்குளம் ஊடாகக் கந்தளாய்வரை எப்பயிரும் செழிப்புற்று வளர்வதைக் காண்கிறோம் அல்லவா!

நீர்வளத்தைப் பார்ப்போம்! தென்னமரவாடியில் இருந்து வெருகல் வரை கடற்கரையில் நிலத்தைத் தோண்டிப் பாருங்கள், மிகத்தூய்மையான நன்னீர் கிடைக்கின்றதே! இது என்ன அதிசயம்! வேறு எங்காவது கடற்கரையில் நன்னீர் கிடைக்கின்றதா? இப்பிரதேசம் பரந்த கடலை அண்டிய பிரதேசமாக இருந்தும் நூற்றுக் கணக்கான பாரிய குளங்களை கொண்டிருப்பது புதுமையாகத் தெரிய வில்லையா! ஒரு நாடு சிறப்புற்றதாக இருக்க வேண்டுமேயானால் அப்பூமி சிறந்த பயிர்வளம் கொண்டதாக அமைதல் வேண்டும். பயிர் வளம் சிறப்புற அமைய வேண்டுமேயாகில் அதற்கு நீர் பாய்ச்சக்கூடிய குளங்கள் அமைவது மிக அத்தியாவசியம் என்பது கூறித்தெரிய வேண்டியது ஒன்றல்ல!

கடல் வளத்தைப் பார்ப்போம்! மிகப் பரந்த விரிருந்த கடல் வளத்தைக் கொண்டது இப்பூமி. ஓர் கடல் வளம் கொண்டதாக அமைய வேண்டுமேயாகில் அக்கடலில் ஓர் ஆறு சங்கமமாக வேண்டும். இது பூமி சாஸ்த்திர விற்பன்னர்களின் முடிந்த முடிவு. கனடாவில் அமைந்திருக்கும் நியூபவுண்லாந்து நகரம் உலகிலேயே மிகச் செழிப்புற்ற கடல் வளம் கொண்டதாக அமைந்ததன் காரணம் என்ன? அங்கு 'மிசூரி மிசிசிப்பி' என்ற மாபெரும் ஆறு அக்கடலில் சங்கமமாவதனால் தானே! இலங்கையின் மகா பெருங்கங்கையான மகாவலி இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இப்புண்ணிய பூமியில் சங்கமம் ஆகியமை இப்பூமியின் புனிதத்தை என்னவென்று கூறுவது! அது மட்டுமா உலக நாடுகள் அத்தனையையும் கவர்ந்து, எந்நேரமும் ஓர்கண் வைக்க வேண்டியதை ஏற்படுத்தியது, இவ் இயற்கை அன்னை தந்த துறைமுகம் அல்லவா! உலக உல்லாசப் பயணிகளின் சொர்க்க புரியாக உப்புவெளியில் இருந்து குச்சவெளிவரை பரந்து கிடக்கும் தங்கக் கடற்கரை சான்று கூறுபவை அல்லவா!

மலைவளம் குறைந்தா இருக்கின்றது? கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் எங்கு பார்த்தாலும் மலைவளம் இருப்பது என்ன புதுமை ! கல் மலையாக இருக்கிறது. அவ்வளவும் சிவந்த மண்வளத்தைக் கொண்ட மலையாக அல்லவா இருக்கின்றது. திரியாயிலும் மலை, கந்தளாயிலும் மலை, குச்சவெளியிலும் மலை, பன்குளத்திலும் மலை, கன்னியாவிலும் மலை, திருக்கோணமலை நகர்ச் சூழலிலும் மலை, கடலை அண்டியும் மலை, காட்டுப் பிரதேசம் முழுவதும் மலை. மலைவளம் தானே மனதிற்கு பசுமையைத் தருகிறது, நாட்டை அழகுற வைக்கின்றது.

மலைவளம் இருந்தால் தானே குளங்கள் அமைய முடியும். குளவளம் இருந்தால்தானே மண் வளமாக இருக்க முடியும். மண் வளம் அமைந்தால் தானே பயிர் வளம் செழிக்க முடியும். பயிர்கள் செழித்தால்தானே மக்கள் வளமுடன் வாழ முடியும். இதைத்தானே இறைவனிடம் இருந்து நாம் எதிர்பார்ப்பது.

''வேண்டுதல் வேண்டாமை இலான்'' இதை விட எமக்கு எப்படி அருள்புரிய முடியும்! இதுதானே புண்ணிய பூமி ஆக முடியும். இதை நாம் ஒவ்வொருவரும் ஆழமாக உணர வேண்டும். பூமியைக் காக்க வேண்டும்.

ஓம் நமசிவாய! சிவாயநம ஓம் என மணி ஓசை ஓங்கார நாதத்துடன் கிளம்பி இப்புனித பூமியையும் எம் எல்லோரையும் காப்பாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணைநாதர் திருநகர் உலா

### விருத்தம்

ராகம் :- ஹம்சாநந்தி

பாந்தளெலாம் விரித்தாடும் பசும்பொன் மேனி
பரவிடு வெண்ணீறும்
காந்துமணிச் சிலம்பினொடு சதங்கை
கழலார்க்கும் மலரடியுஞ்செஞ்
சாந்து திகழ் மாதுமைசேர் பாகனாய்ச்
சற்குரு கோணையப்பன்
பாந்தமொடு வீற்றிருக்குந் திருக்கோலம்
பரவியே சரண்புகுவாம்.

•

### வேறு

(1) ராகம் : கல்யாணி      தாளம் : கண்டசாபு

பஞ்சுமலர்ப் பாதமுடை பேதை மாதுமையும்
பண்ணிசையின் ஒலிகேட்டுப் பரவசமுங் கொண்டு
கொஞ்சுமொழிக் கோதையர் கூடி வந்திடவே
கொள்ளை மகிழ்வினோடு குதித்தோடி வந்து
விஞ்சுபுகழ்க் கோணேசர் விடைமீதில் ஏறி
விழாக்கோலங் கொண்டமலை வீதிவரும் அழகை
கஞ்சமலர்ப் பாதமுடைப் பேதை மாதுமையும்
கயல்விழிகள் தமைமலர்த்திக் களிப்பினொடு கண்டாள்.

(2) ராகம்: குந்தலவராளி      தாளம் ஆதி (திஸ்ரநடை)

அங்காடி வீதிதனில் அலைகடலின் ஓசையுடன்
அங்குவாழும் அன்பர்களின் "அரோகரா" சேர்ந்தொலிக்க
செங்கதலி தோரணங்கள் தெருவை அலங்கரிக்க
திங்களணி பெருமானார் திருவுலா வருமழகை
சங்குவளை கரங்குலுங்க சதங்கை சிலம்பு பதமசைய
வங்கமலி கடற்கரையில் வாழுகின்ற பெதும்பை
அங்கயற் கண்ணழகி அவனிபோற்றுங் கண்ணகை
அங்காடி வீதிநின்று அன்புபொங்கப் பார்த்தாள்

(3) ராகம் :- காபி      தாளம் :- ஆதி

பாரினிலே யாமிதுபோற் பார்த்தறியோம் என்னும்
படியாக அமைந்தமலர்ப் பந்தர்களின் ஊடே
வாரியருள் வழங்குகின்ற வள்ளல் கோணைநாதர்
வருகின்ற வடிவழகின் வண்ணங் கண்டு களிப்ப
நாரியர்கள் சேர்ந்துமே நலமாயெழிற் கோலமிட்டு
நல்லதிருவிளக் கேற்றி நிறைகுடமும் வைத்து
மாரியம்மாள் எனும் மங்கை மகிழ்ந்து மடத்தடியில்
மண்டபத்தில் காத்திருந்தாள் மாநிலஞ் சிறக்கவே.

(4) ராகம் :- கானடா      தாளம் :- ஆதி

எண்ணிலா அடியவர்கள் எதிர்கொண்டு ஏத்திடவே
பண்ணிசையாற் பக்தர்கள் பரவிப் பதம் பணிந்திடவே
கண்ணுதலான் கருணையுடன் கனகமணி ரதமேறி
விண்ணவரும் வியந்திடவே வருகின்ற வண்ணமதை
பெண்ணவளும் கண்டுமனம் பேதலித்துக் காதலுடன்
அண்ணலவன் அடிசேர அளவிலா ஆவலுற்று
வெண்ணிலவுப்பிறைநுதலாள் விசாலாட்சிமடந்தையவள்
விண்ணுயர் வில்வநிழலில் விருப்பினொடு விழித்திருந்தாள்.

(5) ராகம் :- சரஸ்வதி      தாளம் :- ஆதி

நாதஸ்வரஓசை நான்கு திக்குகளையும் நிறைக்க
வேதஒலி விண்ணிறைக்க கீதஒலி மண் நிறைக்க
நாதப் பறையுடைய நாதநாதன் கோணேசன்
போதந் தந்தருளஉலா புறப்பட்டார் என அறிந்து
மாதர்கள் கூடிமலர் மணிநெல்லுந் தூவி
மாண்புற மங்கலப்பொருளும் மகிழ்வொடு நிறைத்து
பேதமிலாப் பெண்களுடன் பேச்சியம்மாள் எனுமரிவை
பேரழகு பொங்கிடவே பெருமானைப் பார்த்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(6) ராகம் : அடாணா* *தாளம் : ஆதி*

ஞாலத்து இருள்அகல ஞாயிறும் செவ்வொளி பரப்ப
சாலவே பட்சிகளெல்லாம் சாமகீதம் இசைப்ப
கோலமாய் அலங்கரித்த நீதிமன்ற வீதியிலே
சீலமிகு சிற்பரனாம் கோணைநாதர் வரும்பவனி
காலமெலாங் கண்டுமனங் களித்திட எண்ணியே
நீலவண்ண நற்தெரிவை நிர்மலி வல்லபையம்பாளும்
வேலவன் அண்ணனுடன் மனையா வெளிதனிலே
கோலத் திருநகைதுலங்க கொலுவீற் றமர்ந்திருந்தாள்.

*(7) ராகம் : சிந்து பைரவி* *தாளம் : ஆதி*

சுற்றுலா எழுந்தருளி சுகிர்தம் அன்பர்க்கருளி
சற்குருவாய் சிற்பரனாம் தென்கைலை மீள்கையிலே
முற்றவெளி அதனில் முத்துநகை முறுவல் காட்டி
நிற்கின்ற பேரிளம்பெண் பத்திரகாளி அம்பாளும்
கற்றைச் சடைமதியான் கவின்கோலங் கண்டுமே
வற்றாத காதல்வயப்பட்டு வண்ண வடிவழகன்
பொற்றாமரைப் பாதம் பொருந்திப் பேரின்பம்
பெற்றேயிருக்கத் தலைப்பட்டாள் தலைவி தானே.

வேறு

*ராகம் : மோனம்* *தாளம்:: கண்டசாபு*

செய்யமலர் திருவடியும் மேலிலங்கும் கழல் சிலம்பும்
கையதனில் மான்மழுவும் காலாக்கினியுந் துடியும்
மெய்யெலாம் வெண்ணீறும் பசுஞ்சாந்தும் விளங்கிடவே
ஐயன் அர்த்தநாரீசனாய் அமர்ந்த திருக்கோலம் இறைஞ்சுவாய்

வாழ்த்து (விருத்தம்)

*ராகம் : மத்திமாவதி*

கல்லினுள் மறைந்து ஆழக் கடலினுட் கலந்து
காதலுடன் கரங்குவிவார் கருத்தினுள் நிறைந்து
மெல்லியள் மாதுமையோடு அர்த்தநாரீஸ்வர உருவில்
மேவிடுங் கோணைநாயகா போற்றி! போற்றி!
மல்லிகை முல்லை மாதவி புன்னையொடு மணக்கும்
மாமலர்ச்சோலை சூழ் மலைமீது நாளும்
பல்லியம் இசைத்தும் பாமாலை சூடுவார்க்கருள்
பாலிக்கும் பூரணா நின்பதம் போற்றி! போற்றி!

*சுபம்*

*98/1 மத்திய வீதி,*
*உவர்மலை,*
*திருகோணமலை.*

*பிரதியாக்கம்*
*செல்வி மணிமேகலாதேவி கார்த்திகேசு*
*ஓய்வு பெற்ற ஆசிரியை,*
*ஸ்ரீ சண்முக இந்துமகளிர் கல்லூரி,*
*திருகோணமலை.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகப் புலவர் பெ. பொ. சிவசேகரனார் இயற்றிய

# திருக்கோண நாயகர் ஊஞ்சல்

காப்பு

ஆலடியான் அன்பர் அகத்தடியான் கல்நெஞ்சில்
காலடியை வைத்துக் கனிவிப்பான் – நூலறியாப்
பேதைக் கருளானோ கோணமலைப் பெம்மான்மேல்
ஓதுதற்கோர் 'ஊஞ்சல்' உவந்து.

ஊஞ்சற் பதிகம்

சீராருங் கோணமலைச் செம்பவள நாயகரும்
ஏராரும் பூங்குழலி ஏந்திழையும் உண்மகிழப்
பாராரும் ஊஞ்சற் பதிகந் தனைப்பாடி
ஏராளர் வாழியவென் றாடுக பொன்னூசல்
இலங்கைவனம் ஓங்குகவென் றாடுக பொன்னூசல்.

ஏடுகளுக் கெட்டாத எண்ணிய காலத்தை
ஊடுருவி வென்றமலை ஓதரிய தேவாரப்
பாடல்பெறு கோணமலைப் பண்டைப் பெருமையெல்லாம்
தேடி எடுத்தோதி ஆடுக பொன்னூசல்
தென்கைலை வாழியவென் றாடுக பொன்னூசல்.

காணரிய மாமலையைக் காணுந் திறம்பெற்றும்
ஊனுடம்பாற் பேர்த்தெறிய உன்னியசீர் ராவணனார்
நாணித் தலைகுனிய வைத்த நடராஜன்
கோணமலை வாழியவென் றாடுக பொன்னூசல்
கொட்டம் ஒழிந்ததுவென் றாடுக பொன்னூசல்.

ஈழத் திருக்கண்ணில் ஒன்றாய் இலங்குநகர்
வாழையடி வாழையாய் வாழ்வார்க் கினியநகர்
ஆழிக் கடல்சூழும் ஐயன் அமர்ந்தநகர்
வாழி வளநகரென் றாடுக பொன்னூசல்
வயல்கள் விளைகவென் றாடுக பொன்னூசல்.

முன்னாள் குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னாட் பறங்கியர்கள் பேதமையால் பேர்த்தனர்காண்
அன்னார் அறியாமல் அன்றிழைத்த மாபிழையை
என்னே பொறுத்தானென் றாடுக பொன்னூசல்
ஏதிலர்க்கும் நல்லானென் றாடுக பொன்னூசல்.

அம்பலத்தில் நின்றாடும் ஐயன் இருந்தாட
செம்பவள முத்தொளிரத் தேவி சிரித்தாட
அம்புவியின் கண்கள் களிப்பில் மிதந்தாட
உம்பர் உலகாட ஆடுக பொன்னூசல்
உயர்கோணை வாயவென் றாடுக பொன்னூசல்.

மூவேந்தர் கையேந்த முத்தமிழ்தேர் நாவினிலே
பாவேந்தர் தேவாரப் பண்ணேந்த மாமறையோர்
பூவேந்தி மால்தேடும் பூங்கழலை அர்ச்சிக்கக்
கோவேந்தைக் கண்டோமென் றாடுக பொன்னூசல்
கோணமலை வாழியவென் றாடுக பொன்னூசல்.

கொல்லா அறமோங்கக் கோணைநகர்ப் பேரோங்க
நல்லார் செயலோங்க நாவலர்கள் சீரோங்க
கல்லால் திறம்பாடி ஆடுக பொன்னூசல்
வறுமை ஒழிகவென் றாடுக பொன்னூசல்.

கற்பு நெறியோங்கக் கன்னியர்கள் வாழ்வோங்கச்
சற்புத் திரரின் சலியா உழைப்போங்கச்
சிற்பக் கலையின் திறமோங்கத் தென்கைலை
வெற்பன் புகழ்பாடி ஆடுக பொன்னூசல்
வீரம் விளைகவென் றாடுக பொன்னூசல்.

பேதம் அகலப் பிணக்குகளும் போயகலச்
சீதப் புனல்வயல்சூழ் தென்கோண மாமலையான்
கீத இசைகேட்டுக் கேடெல்லாம் கெட்டொழிய
நீதி நெறியோங்க ஆடுக பொன்னூசல்
நீற்றின் ஒளிவிளங்க ஆடுக பொன்னூசல்.

நீர்வாழி நெல்வாழி செங்கோல் நெறிவாழி
கார்வாழி ஈசன் கழல்வாழி கோணமலை
ஊர்வாழி ஊஞ்சற் கவிபாடும் நற்றொண்டர்
சீர்வாழி வாழியென் றாடுக பொன்னூசல்
செந்தமிழ்த்தாய் வாழியவென் றாடுக பொன்னூசல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோணமலைத் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர்
பண் - புறநீர்மை

*திருச்சிற்றம்பலம்*

1. *நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பும்*
*நிமலர் நீறணி திருமேனி*
*வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த*
*வடிவினர் கொடியணி விடையர்*
*கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்*
*அளப்பருங் கனமணி வரன்றிக்*
*குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

*பொழிப்புரை* – முறையாகப் பொருந்திய வீரக்கழலின் ஒலியும், அழகிய சிலம்பின் ஒலியும் முறையே வலப்பாதத்திலும், இடப்பாதத்திலும் ஒலிக்கின்ற திருவடிகளையுடையவரும், மும்மலங்கள் இல்லாதவரும், திருநீறணிந்த திருமேனியையுடையவரும், மலையரசன் மகளாகிய மாதுமையம்பாளை இடப்பகாத்திற் பொருந்திய வடிவத்தையுடையவரும், இடபக் கொடியை யுடையவருமாகிய கோணேஸ்வரப் பெருமான் சந்தனம், அகிற் கட்டைகளையும், அளவற்ற இரத்தின மணிகளையும், முத்துக்களையும், அலைகளால் கடற்கரையிற் குவிக்கின்ற சப்திக்கின்ற சமுத்திர நீராற் சூழ்ந்த கோணமாமலையில்எழுந்தருளியிருக்கின்றார்.

கழல் – ஆண்களணிவது. சிலம்பு – பெண்களணிவது. மும்மலம் – ஆவணம், கன்மம், மாயை. சந்து–சந்தனம், ஓதம் – நீர்.

2. *கடிதென வந்த கரிதனை யுரித்து*
*அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்*
*பிடியன நடையாள் பெய்வளை மடந்தை*
*பிறைநுத லவளொடும் உடனாய்க்*
*கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து*
*கொள்ளமும் நித்திலஞ் சுமந்து*
*குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

*பொழிப்புரை* – தேவர்கள், முனிவர்களைக் கொல்ல விரைவாக வந்த காயாசுரனாகிய யானையின் தோலை உரித்து அதனைத் தனது திருமேனியில் அணிந்தவரும், பெண்யானையின் நடையையொத்த அழகிய நடையையுடையவளும், வளையல்களையணிந்தவளும், பிறைபோன்ற நெற்றியுடையவளுமாகிய மாதுமையோடு சேர்ந்து கோணேஸ்வரப் பெருமான், பயங்கரமாக ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்டுச் சேற்றினையும், முத்துக்களையும் தாங்கி வந்து கரைகளிற் சேர்த்துக் குடிமக்களை நெருக்கின்ற அலைப்பெருக்கத்தையுடைய கோணமாமலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

கொள்ளம் – சேறு, பிடி – பெண்யானை, கரி – யானை.

3. *பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்*
*படர்சடை முடியிடை வைத்தார்*
*கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகமாக*
*முன்கலந்தவர் மதில்மேல்*
*தனித்த பேருருவ விழித்தழல் நாகந்*
*தாங்கிய மேரு வெஞ்சிலையாக்*
*குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

*பொழிப்புரை* – குளிர்ச்சி பொருந்திய இளம்பிறைச் சந்தினையும், அழகிய தலையை உடைய நாகபாம்பினையும், பரந்த சடைமுடியிற் தரித்தவரும், கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாயினையுடைய மாதுமையை இடப்பாகத்திலே கொண்டவரும், மூன்று புரங்களாய் வந்து அழிவு செய்த தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி என்னும் அசுரர்களின் மீது ஒப்பற்ற பெருவடிவங்கொண்டு மேருமலையை வில்லாக வளைத்து, வாசுகியென்னும் பாம்பை நாணாகப் பொருத்தித் தாங்கி நெற்றிக்கண்ணால் விழித்து அவ்வசுரர்களை அழித்து அருள் புரிந்த கோணேஸ்வரர் ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த கோணமாமலையில் எழுந்தருளியிருக்கிறார்.

குனித்தல் – வளைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. *பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்*
*பாங்குடை மதனனைப் பொடியா*
*விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த*
*விமலனார் கமலமார் பாதர்*
*தெளித்து முன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்*
*செம்பொனும் இப்பியும் சுமந்து*
*கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

*பொழிப்புரை* – புதிதாகப் பெருகி வந்த கங்காநதியைத் திருச்சடையிற் தரித்தவரும், அழகிய மன்மதனைப் பழித்தது போல நெற்றிக்கண்ணால் விழித்துச் சாம்பராக்கிப் பின்னர் மன்மதனுடைய மனைவி இரதியானவள் பணிந்து வேண்டியபிரகாரம் மன்மதனை முன்போல் உயிர்பெற்றெழச் செய்தவரும், மலமற்றவரும், செந்தாமரை போன்ற பாதங்களையுடையவருமாகிய கோணேசர், ஒலிக்கின்ற கடலானது முத்துக்களையும், செம்பொன்னையும், சிப்பிகளையுஞ் சுமந்து வந்து வலிய அலைகளால் கரைகளிலே சேர்க்கின்ற கோணமாமலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

தரளம் – முத்து, திரை – அலை.

5. *தாயினும் நல்ல தலைவரென் றடியார்*
*தம்மடி போற்றிசைப் பார்கள்*
*வாயினும் மனத்தும் மருவிநின் றகலா*
*மாண்பினர் காண் பல வேடர்*
*நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி*
*நுழைதரு நூலினர் ஞாலம்*
*கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

*பொழிப்புரை* – பெற்றதாயினும் மேலான அன்புள்ள தாயாகிய தலைவனென்று மெய்யடியார்கள் கோணேசப்பெருமானுடைய திருவடிகளில் வணங்கி வாயினால் வாழ்த்தியும் மனத்தினால் நினைத்தும் துதிப்பார்கள். என்றும் நீங்காது நிற்கின்ற மகாஞானிகள் காணும்படியாகப் பலபல வேடங்களையுடையவராகியும், நோயினாலும், தீராப்பிணியினாலும் வருந்துகின்ற அன்பர்களின் துன்பத்தை நீக்குபவரும், இடப்பாகத்தை விலக்கிப் பூநூலை அணிந்தவருமான கோணேசர் கோயில்களாலும், சுனைகளாலும், கடலாலும் சூழப்பட்டு பூமியின்கண் சிறந்து விளங்கும் திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

பிணி – மும்மலப்பிணியுமாம்.

6. *பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி*
*தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்*
*திரிந்திடாவண்ணம் உதைத்தவர்க் கருளுஞ்*
*செம்மையார் நம்மையாளுடையார்*
*விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை*
*வேங்கை வண்செருந்தி செண்பகத்தின்*
*குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

*பொழிப்புரை* – பக்தியோடும், பரிவோடும், தூய உள்ளத்தோடும் வழிபட்ட அடியவனாகிய மார்க்கண்டேயனுடைய உயிரை எடுக்கவந்த கூற்றுவனை அழிந்து போகும்படி உதைந்து மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்த மேலான அருளாளரும்,கருணையினால் நம்மையெல்லாம் ஆட்கொண்டருளு கின்றவருமாகிய கோணேசப் பெருமான் பரந்து உயர்ந்து வளர்ந்த வனமல்லிகையும், குருக்கத்தியும், புன்னையும், வேங்கையும், வண்மையான செருந்தியும் செண்பகமும், குருந்தும், இவைகளில் முல்லைக்கொடிகளும் படர்ந்து விளங்கும் சோலைகள் சூழ்ந்த கோணமாமலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

மாணி – பிரமச்சாரி, (மார்க்கண்டேயர்) கூற்று – இயமன் மௌவல் முல்லை. மாதவி – குருக்கத்தி. வேங்கை – வேங்கை மரம். செருந்தி – செருந்திமரம். குருந்து – காட்டுநாரத்தை.

7. *பாடல் கிடைக்கவில்லை.*

8. *எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்*
*ஏத்திட ஆத்தமாம் பேறு*
*தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்*
*இறப்பறியாதவர் வேள்வி*
*தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை*
*தன்னருள் பெருமையும் வாழ்வும்*
*கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

*பொழிப்புரை* – கயிலாயமலையை எடுத்த இராவணனுடைய அகங்காரத்தைத் தனது காற்பெருவிரலால் மிதித்து அழித்தவரும், இராவணன் வருந்தி இறைவனாகிய கோணேசரைத் துதிக்க அவனுக்கிரங்கி இஷ்டமான அதிகாரச் செல்வத்தைக் கொடுத்தவரும், பிறப்பு இறப்பு இல்லாதவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மைப் புறக்கணித்த தக்கனுடைய வேள்வியை அழித்துப் பின்னர் அவன்மீது கொண்ட கருணையினால் அருள்புரிந்து வாழ் வளித்தவரும் எல்லோராலும் விரும்பப்படும் பெரிய கீர்த்தியையுடையவருமாகிய கோணேசப் பெருமான் திருக்கோணமலையில் எழுந் தருளியுள்ளார்.

ஆத்தம் – இஷ்டம், வேள்வி – யாகம்.

*9. அருவரா தொருகை வெண்டலை ஏந்தி*
*அகந்தொறும் பலியுடன் புக்க*
*பெருவராயுறையும் நீர்மையர் சீர்மைப்*
*பெருங்கடல் வண்ணனும் பிரமன்*
*இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய்*
*உயர்ந்தவர் பெயர்ந்த நன் மாற்கும்*
*குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

*பொழிப்புரை* – அருவருப்படையாமல் ஒரு கையில் மண்டையோட்டை (பிரம்மகபாலம்) ஏந்தி வீடுகள் தோறும் பிச்சையேற்ற பெருமைக்குரிய குணத்தையுடையவரும், சிறந்த கரிய கடல் போன்ற நிறத்தையுடைய மகாவிஷ்ணுவும், பிரம்மாவும் ஆகிய இருவரும் முறையே அடியையும் முடியையும் தேடி அறியமுடியாதபடி ஒளிப்பிளம்பாய் உயர்ந்து விளங்கியவரும், திருடிவயைக் காணமுடியாது மீண்டு வந்த திருமாலுக்குக் குருவாய் நின்றவருமாகிய இறைவன் திருக்கோணமலையில் எழுந்தருளி யிருக்கின்றார்.

வெண்டலை – பிரமகபாலம். சீர்மை – சிறப்பு.

*10. நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்*
*நெறியல்லாதன புறங் கூற*
*வென்று நஞ்சுண்ணும் பரிசினர் ஒரு பால்*
*மெல்லியளொடும் உடனாகித்*
*துன்றுமொண் பௌவ மௌவலுஞ் சூழ்ந்து*
*தாழ்ந்துறு திரைபல மோதிக்*
*குன்றுமொண் கானல் வாசம் வந்துலவும்*
*கோணமாமலை அமர்ந்தாரே.*

*பொழிப்புரை* – நின்றநிலையில் உண்ணுகின்ற சமணரும், இருந்து உண்ணுகின்ற தேரரும் (புத்தர்) குதர்க்கமாக வாதஞ் செய்து சைவநெறியைப் புறங்கூறி, நன்னெறியல்லாத சமயநெறிகளைக்கூற அவர்களின் சமயக் கொள்கைகளை மறுத்து வென்றவர்களும் அவர்கள் ஊட்டிய நஞ்சையுண்டவர்களாகிய அடியார்கள் இருபக்கமும் சூழ்ந்து நிற்க, இடப்பாகத்தை மாதுமைக்குப் பகிர்ந்தளித்த அர்த்தநாரீச்வர வடிவினராகிய கோணேசர் நெருங்கி அலைமோதுகின்ற சமுத்திரக்கரையில் வளர்ந்த மல்லிகையின் மணமும் கடல் அலைகளால் மோதப்படும் குன்றுகளிலுள்ள சோலைமலர்களின் நறுமணமும் வந்து வீசுகின்ற திருக் கோணமாமலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

பௌவம் – சமுத்திரம்.

*11. குற்றமில்லாதார் குரைகடல் சூழ்ந்த*
*கோணமாமலை யமர்ந்தாரைக்*
*கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்*
*கருத்துடை ஞான சம்பந்தன்*
*உற்ற செந்தமிழார் மலை யீரைந்தும்*
*உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்*
*சுற்றமுமாகித் தொல்வினை யடையார்*
*தோன்றுவர் வானிடைப் பொலிந்தே*

*பொழிப்புரை* – இறத்தல் பிறத்தலாகிய குற்றமற்றவராயும், ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட கோணமாமலையில் எழுந்தருளியிருப்பவருமாகிய கோணேசப் பெருமானைக் கற்றுங் கேட்டும் நல்லுணர்வு பெற்றுச் சீர்காழியில் அவதரித்த ஞானக்குழந்தையும், உயர்ந்த ஞானக்கருத்துகளைக் கூறுகின்றவருமாகிய திருஞானசம்பந்தர் அருளிய செந்தமிழ் மாலையாகிய பத்துப்பாடல்களையும் படிப்போரும், அதனைக் கேட்போரும் சான்றோர்களுக்கு உறவாகி முன்னை வினை வந்து சூழாமல் மேலான உலகங்களில் சிறப்போடு வாழ்வார்கள்.

*திருச்சிற்றம்பலம்.*

189672

LIBRARY UNIVERSITY OF JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

### திருக்கோணமலை

தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன தனதான

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த ஆடையு மணிப்பூணு மாகவெ
மினுக்கு மாதர்க ளிடைக்காம மூழ்கியெ
மயலூறி

மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியெ உழைத்தெவி டாய்படு
கொடியேனைக்

கலக்க மாகவெ மலக்கூடி லேமிகு
பிணிக்கு ளாகியெ தவிக்காம லேபுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயும்
ஒருவாழ்வே

கதிக்கு நாயக உனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயெனை அருட் பார்வை யாகவே
கழற்கு ளாகவெ சிறப்பான தாயருள்
தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாழ்மகிழ்
தருவேளே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுநி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோல மாய்வரு
முருகோனே

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில்
வருவோனே

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ
எடுத்த வேல்கொடு பொடித்தூள தாவெறி
நினைத்த காரிய மநுக் கூல மேபுரி பெருமாளே.

பொழிப்புரை – உடலை விற்று வாழும் பெண்கள் தங்கள் உடம்பில் ஆடைகள் அணிந்து, அணிகலன்கள் பூண்டு, மேகலை என்று சொல்லப்படுகின்ற ஒட்டியாணம் கட்டி உடம்பை அழகுபடுத்தி மினிக்குகின்றார்கள். அவர்களுடைய காம இச்சையில் மயங்கினேன்.

அந்தக் காம மயக்கத்தினால் என்னை இந்தப் பூமியிலுள்ளவர்கள் இவனும் ஒரு காமியென என் கண் முன்னேயே நின்று இகழவும் நான் அவமானத்தையும் புறந்தள்ளி இந்த உடம்பின் காம வேட்கையால் மீண்டும் மீண்டும் காமதாகந் தணியாத கொடியவனானேன்.

காமக் கலக்கத்தினால் மலஞ்சோரும் இந்த உடம்பின் மிகுந்த நோய்களுக்களாகித் தவிக்காமல், உன்னைக் கவிமாலையால் போற்றித் துதிக்கும் என்னை ஈடேறச் செய்கின்ற ஒப்பற்ற பெருவாழ்வுடையவனே !

மேலான மோட்சகதி அருளுகின்ற தலைவனாகிய கோணேசப் பெருமானே ! உன்னைத் தேடித்தேடி, உன் புகழையே பாடுகின்ற, நாயிற் கடைப்பட்ட என்னையும், உனது அருட்பார்வையாகிய கருணையினால் உன் திருவடிப் பேறடைவதற்கு அருள் புரிய வேண்டும்.

தென்கயிலை மலையின் தலைவனாகிய உன்னையே இச்சித்துச் சிவக்காமியா யமர்ந்துள்ளமாதுமையாளின், திருக்குமாரனாகிய ஆறுமுகங் கொண்ட சண்முக தேசிகனே! அழகிய வடிவுடைய குறமகளாகிய வள்ளியம்மை யாருக்கு இன்பத்தைத் தருகின்றவனே !

வசிட்டர், காசிபர், தவப்பேறுடைய யோகியர்கள், அகத்திய மகா முனிவர், இடைக்காட்டுச் சித்தர், நக்கீரன் என்பவர்கள் பாடிய பாக்களின் தத்துவப் பொருளையே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளுகின்ற முருகப் பெருமானே!

நான்கு வேதங்களையும் நிலைக்கச் செய்கின்ற மேலான அந்தணர்கள், திருக்கோணமலைத் தலத்தில் உயர்ந்து விளங்கும் கோபுர வாசலில் நின்று பாடும் அனுபூதிப் பாடலின் பொருளாக விளங்கி வருகின்றவவே!

புண்ணிய பாவங்களுக்கேற்ப நிகழுகின்ற ஏழு பிறப்புக்களையும், தனது திருக்கரத்திலேந்திய, கடல்கோள் போன்று அழிக்கும் ஒப்பற்ற வைவேலினால் பொடிப்பொடியாகும்படி செய்தது. நினைத்த காரியங்களெல்லாம் அனுகூலமாக முடியும்படி அருள்புரிகின்ற பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தித்தோம் சிந்துகின்றோம் நன்றிகளை

கிழக்கு இலங்கையின் கண்போன்று விளங்கும் தட்சணகைலாயமான திருக்கோணேசர் ஆலயத்திற்கு நடந்த திருப்பணிகள் பல. அவற்றுள் சிகரம் வைத்தாற்போல் இப்போது கட்டி முடிக்கப்பெற்ற புதிய கண்டாமணிக் கோபுரமானது, திருக்கோணநாதரின் நாதம் நாற்புறமும் ஒலிக்கவென நன் மக்கள் சிலர் எடுத்துக் கொண்ட அரிய முயற்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இத்தனை சிறப்பான தெய்வத் திருப்பணிக்காகத் தங்களது உடல் உழைப்பையும், பணத்தையும் வழங்கியவர்கள் பலர் இருந்தும் கண்டாமணிக் கோபுரமானது இவ்வளவு சிறப்பாக அமைந்தமைக்கு காரணகர்த்தாவாக விளங்கிய இருவரின் கடின உழைப்பு இங்கு நினைவு கூறத்தக்கது.

முதற்கண் நாம் இங்கு நன்றிகூற விளைவது லண்டன் மாநகரில் வதியும் திரு. அ. மகேந்திரன் அவர்களுக்கு. இவர் மணி அமைப்பதற்கான கருவை உருவாக்கி, அதன் செலவிற்கான பணத்தை நன்கொடையாகத் திரட்டும் பொருட்டு, உலகின் பல பாகங்களிலும் வசிக்கும் எம்பெருமானின் அடியார்களைத் தொடர்பு கொண்டு நிதியைச் சேகரித்துக் கொண்டிருந்த சமயம், அவருக்கு நன்கு பரிச்சயமானவர்களே அவரை சந்தேகக் கண்கொண்டு சொல்லொண்ணா இம்சைகளைக் கொடுத்து, அவரின் செயற்பாடுகளை ஆரம்பத்திலேயே மழுங்க வைக்க எடுத்த முயற்சிகளை நம்மில் சிலர் நன்கறிவோம். அத்தனை எதிர்ப்புக்களையும் எதிர் நீச்சல் போட்டு, தான் எடுத்த கருமமே கண்ணாக இருந்து கடைசியில் இவ்வரிய கண்டாமணியை பிரான்ஸ் நாட்டில் செய்வித்து தன்னுடனே கொண்டு வந்து திருக்கோணேசர் ஆலயத்தில் சேர்த்த பெருமை அவரையே சாரும்.

இங்கு குறிப்பிட்டுக்கூற வேண்டியது ஒன்று உண்டென்றால் அது "சிறு துளி பெரு வெள்ளம்" என்பது போல் பலரிடம் இருந்து பெற்ற நிதியை விழலுக்கு இறைத்த நீராக்காமல் தன் சிரமத்தையும் பணத்தையும் பாராமல் தன்னை முழுமையாகத் தெய்வத் திருப்பணிக்கு அர்ப்பணித்த உத்தமனார் திரு. அ. மகேந்திரன் என்றும் எம் எல்லோராலும் நினைவு கூறப்பட வேண்டியவர்.

இப்படிக் கொண்டு வரப்பட்ட கண்டாமணியானது ஆலயத்தின் அறையில் ஆறு மாதங்களுக்கு மேலாக இருந்ததும் பலர் அறிந்ததே. இக்காலகட்டத்தில் தான் வெளிநாட்டில் வேலைசெய்யும் திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கணேஸ் கீர்த்திதாஸ் என்னும் அன்பர் இந்தக் கண்டாமணியின் கதையைக் கேள்விப்பட்டு, கோபுரமேற்றி ஒலிக்கவைக்க திடசங்கற்பம் பூண்டு அதற்கான முழுச்செலவையும் தான் ஏற்பதாகக் கூறி அந்தக் கோபுரத்திற்கான திருப்பணியை, அவர் திரும்பவும் வெளிநாடு செல்லும் முன் ஆரம்பித்து வைத்ததையும் நாம் அறிவோம்.

கண்டாமணிக் கோபுர வேலைகள் முடியும் தருவாயில் இருந்த போது அதன் கும்பாபிஷேகத்திற்கு அன்னாரை அழைக்கும் பொருட்டு அவர் மனைவி மூலமாகத் தொடர்பு கொண்டபோது தன்னுடைய பிரசன்னம் முக்கியமில்லை. எவ்வளவு விரைவாகவும் சிறப்பாகவும் இவ்வைபவத்தையுச் செய்து முடிக்க வேண்டுமோ அவ்வளவு விரைவாக செய்து முடிக்கும் படி அவர் கூறினார். இங்கு இன்னுமொன்றையும் கூற வேண்டியது நம் கடமை. திரு. கணேஸ் கீர்த்திதாஸ் அவர்கள் கோயில் திருப்பணிகளுக்குப் புதியவரல்ல. இதற்கு முன்னரும் பல கோயில்கள், பாடசாலைகள் எனப் பலவிதத்திலும் நன்கொடைகளை விளம்பரம் தேடாமல் கொடுத்த பெருந்தகை என அவருடன் மிகவும் நெருக்கமாகப் பழகியவர்களுக்கு மாத்திரம் தான் தெரியும்.

ஒருவர் உடலாலும் மற்றவர் உள்ளத்தினாலும் ஒன்றுபட்டு உருவானது தான் இன்று எம்முன்னே உயர்ந்து மிளிர்ந்திருக்கும் இக் கண்டாமணிக் கோபுரமாகும்.

வாழ்த்துவோம் இருவரையும் கோணேசர் அருள் பெற்று வளமுடன் வாழ்கவென.

**திருமலை வாழ் மக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EULOGY

The Holy-Tasks, carried out towards the betterment of Koneswaram, which is situated in the eastern part of Sri Lanka and also is known as "Thakshna Kailasam", are many, among which, the construction of Bell Tower, which has been built for the purpose of fixing the temple bell known as "Kandamani" has become the peak of all the tasks. This has set an example for the efforts taken by some of our people, to make the noise of Thirukoneswarar spread all over the four directions.

Although there are a number of benefactors who gave their money and labour for such a divine task, we have to remember two particular figures for their hardwork to make this bell tower so excellent.

First of all we would like to tender our gratitude to Mr. A. Mahendra, who is living in London. It was he who introduced the concept of making this temple bell. When he contacted the devotees of our Lord, living all over the world, for collecting the necessary funds, to complete this task, he was suspected even by many of those who were known to him well. We are well aware of the fact that those elements, even tried their best to cause him many inconvenience and thereby, tried to defeat his task. Having faced against all those obstructions and obstacles, he concentrated himself fully in fulfilling the task, he began to do, got this rare temple bell made in France, brought it himself and handed over it to the temple.

We have to specifically mention here that, he has utilised the money collected for this purpose little by little, wisely with devotion and full concentration towards the task begun by him. Mr. A. Mahendra should be remembered by all of us for ever, for the rare service rendered by him for this divine purpose.

The "Kandamani" temple bell, thus brought to the temple, had been in the antechamber of the temple for more than six months. When one Mr. Ganesh Keerthidas, who is working in abroad, heard that the temple bell is lying in the antechamber for months, he determined to give it the proper place, the tower, for the bell to be fixed. He came forward to incur the entire expenses for the construction of bell tower, and in fact he inaugurated the work before he left for abroad, once again.

When the construction work of the bell tower was almost finished, we contacted him to be present at the time of "Kumbabishegam" of the bell tower, through his wife. But this humble and noble minded gentleman, has conveyed his message stating that his presence is not necessary and requested us to have the function grandly and as early as possible.

We would like to add the fact that Mr. Ganesh Keerthidas is not a pioneer to such holy tasks towards the temple. He has donated to several temples and schools, without seeking any publicity even before this, and which fact is known only to some who are very close to him.

The "Kandamani bell tower, which could be seen by us today, is the result of the assistance of two bebefactors, one worked hard physically and the other one helped financially. Let us wish both. May Lord Koneswaran bless both.

**People of Trincomalee**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

கிழக்கிலங்கையின் கண்ணெனப் போற்றப்படுவதும், கடல்கடந்து வாழ்ந்த சிவன் நாயன்மார்களின் சிந்தனையைத் தூண்டி, அவர்களால் புகழ்ந்து பாடப்பெற்ற புண்ணிய தலமாகிய திருக்கோணேசர் ஆலயத்திற்கு சிறு திருப்பணியைச் செய்ய எனக்குக் கிடைக்கப் பெற்ற பேற்றிற்கு, நான் அங்கு எழுந்தருளியுள்ள எல்லாம் வல்ல கோணைநாதரை முதற்கண் என் சிரம் தாழ்த்தி வணங்கிப் போற்றுகின்றேன்.

அடியேன் வெளிநாட்டிலிருந்து எனது விடுமுறையைக் கழிப்பதற்காக இங்கு வந்து நின்றபோது திருக்கேணேசர் ஆலயத்திற்கென பிரத்தியேகமாக லண்டனில் வதியும் திரு. அ. மகேந்திரன் என்பவரால் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட கண்டாமணியானது கோபுரத்திற்கான வசதியின்மையால், கோயில் அறை ஒன்றில் இருப்பதைக் கேள்விப்பட்டு, அதற்குரியவர்களை நான் அணுகிய போது தான் நிதி வசதியில்லை எனத் தெரியவந்தது. எனவேதான் நான் என்னிடம் உள்ள சிறு பணவசதியைக் கொண்டு மணிக்கோபுரத்தைக் கட்டுவதற்கான பணியைத் தொடங்க முடிவு செய்தேன். மேற்படி பணியில் என்னை ஈடுபடுத்திய போது எனக்கு ஊக்கமும் ஆக்கத்திற்கான உதவிகளும் புரிந்தவர்கள் ஏராளம். அவர்கள் எல்லோருக்கும் நான் என்றென்றும் நன்றிக் கடன்பட்டுள்ளேன். குறிப்பாக நான் கடமைப்பட்டவர்களில் திரு. மு. கோ. செல்வராசா, திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபைத்தலைவர் அவர்களுக்கு எனது தனிப்பட்ட மரியாதை கலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கோயில் தலைவர் என்ற முறையில் நான் அவரை அணுகி அனுமதி கேட்ட போது எவ்வித மறுப்பும் கூறாமல் "நீர் செய்ய வேண்டியதைச் செய்யும் என்னாலான உதவியை எந்நேரமும் நான் உமக்குத் தருவேன்" என வாக்களித்தபடி உதவிகளையும், ஊக்கத்தையும் தந்து இக்கோபுரத் திருப்பணி இவ்வளவு சிறப்பாக முற்றுப் பெற்றதற்கு மீண்டும் எனது நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

எனது காலஞ்சென்ற தந்தை சின்னத்தம்பி கணேஸ் அவர்களின் பாலிய நண்பரான முத்தையா சாமியார் அவர்கள் நான் திருக்கோணநாதரின் ஆலயத்திற்குச் செல்லும் வேளைகளில், எனக்கு ஆலயத்தின் அருமை பெருமைகளை விளக்கியும், இவ்வாலய சரித்திரத்துடன் பின்னியிருக்கும் அற்புதங்களையும் விளக்கிக் கூறுவதுண்டு. இந்த ஆலயத்திற்கு கண்டாமணி ஒன்று கட்டாயம் தேவை என்பதை இந்த பணி தொடங்கும் முன்னரே எனக்குக் கூறியவரும் அவரே. இந்த மணிக்கோபுரத்தைக் கட்டத் தூண்டியவர்களில் அவர்தான் முன்னோடி எனக் கூறுவதே சாலப் பொருந்தும். என்னுடைய இவ்வரிய தொண்டிற்கு என் மனதில் அவர் அன்று விதைத்த விதைதான் இன்று நிமிர்ந்து நிற்கும் கண்டாமணிக் கோபுரமாகும். என் மரியாதைக்குரிய முத்தையா சாமியார் அவர்கட்கு என் அன்பு கலந்த நன்றிகள் உரித்தாகுக.

இத் திருப்பணிக்கான முயற்சியில் நான் இறங்குமுன் ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலய பிரதம குருவாகிய வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்களை அணுகி எனது திருப்பணியின் நோக்கத்தை விபரித்து இது சம்பந்தமாக வேண்டிய கிரியை முறைகளையும், அடிக்கல் நாட்டும் வைபவம், அதைத்தொடர்ந்து வரும் மணிக்கோபுர கும்பாபிஷேகத்தையும் யாவருக்கும் பலனும், பயனும் அடையும் வண்ணம் நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்ட போது தனது நேரத்தையும் கருத்திற் கொள்ளது தான் கற்றுணர்ந்த வேத, சாஸ்திர, சம்பிரதாய முறைகளுக்கமைய கோபுர அடிக்கல் நாட்டும் வைபவத்திலிருந்து கும்பாபிஷேகம் வரையும் தன்னாலான உதவிகளை எனக்கும் இவ்வூர் மக்களுக்கும் தந்து ஆற்றிய அரிய சேவைக்கு என் சிரம் தாழ்த்தி நன்றியை அவருக்குத் தெரிவிக்கின்றேன்.

இந்தக் கண்டாமணிக் கோபுரத்துக்கான கட்டிட தொழில்நுட்ப ரீதியில் பரிசீலித்து வகுத்து எமக்கு உறுதுணையாக நின்று ஆலோசனை வழங்கிய "குறளமுதம்" திரு. கா. விநாயகசோதி அவர்களுக்கு எனது மனமுவந்த நன்றிகள் உரித்தாகுக.

சைவமும் தமிழும் தழைத்தோங்க தங்களின் பங்களிப்பையும், உதவி ஒத்தாசைகளையும் நல்கிய பல பெரியார்களைக் கண்ட இந்த மண்ணில் அத்தகையோரில் ஒருவராய் இன்றும் எம்முடன் வாழ்ந்து அதற்கொப்பான சேவையைத் தன்னலம் பாராமல் இனிய உள்ளத்துடனும், இன்முகத்துடனும் யாவரும் பயன்படும் வண்ணம் நல்கிக் கொண்டிருக்கும் சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் என்றும் என் வணக்கத்திற்குரியவர். கண்டாமணிக் கோபுர விஷயமாக நான் அவரை அணுகி எனக்குள் இருந்த சில சந்தேகங்களைப் போக்க அவரைக் கேட்ட போது பொறுமையாக எனக்குத் தந்த அறிவுரைகளும் விளக்கங்களும் விலைமதிக்க முடியாதன. இத்தகைய பண்பாளருக்கு என் மனமுவந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய தெய்வ வழிபாட்டிற்கு வடிவம் அமைத்து வழியமைக்கும், சிறப்பான பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அரும் சேவையாற்றிவரும் 'சிற்பகலாபானு' ஸ்தபதி கந்ததாஸ் இரவீந்திரராஜா ஆசாரியாருக்கும் அவரின் குழுவினருக்கும் எனது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இத்தனை அழகாக இம்மணிக் கோபுரத்தை வடிவம் அமைத்து அதற்கேற்ப வண்ணக் கலவை கொண்டு மேலும் மெருகூட்டி வைத்தகண் வாங்காமல் நிலைத்திருக்க தன் அரிய வித்தையை திக்கெட்டும் வண்ணம் ஆக்கி எமக்களித்த இளம் சிற்பக் கலைஞர் இரவீந்திரராஜாவிற்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்மணிக் கோபுர கட்டுமானப் பணியில் நான் ஈடுபட்டு அதற்கான பொருட்களைச் சேகரித்து வந்த சமயம் மிகவும் முக்கியமான மருத மரக்குற்றிகள் இரண்டு எவ்வளவோ தேடியும் கிடைக்காமல் சற்று சலிப்படைந்த வேளையில், என் நண்பர் ஒருவர் மூலமாக உவர்மலையில் எழுந்தருளி உள்ள துர்க்கை அம்மன் கோவில் வளாகத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அந்த ஆலயத்தின் பிரதம குருவாகிய சிவஸ்ரீ ஸ்ரீகாந்தன் குருக்கள் ஐயாவை அணுகி எவ்வளவு பணமானாலும் தரலாம் எனக்கு மருத மரக் குற்றிகள் இரண்டைத் தரும்படி கேட்டேன். கேட்ட மாத்திரத்தில் ஒரு நொடி கூட தாமதியாது "கோணேசப் பெருமான் தயவில் தான் இந்தப் புண்ணிய பூமி உள்ளது அவருடைய தேவைக்கு இல்லா மரம் வேறெதற்குப் பயன்படும்', எனக் கூறி அன்றே அம்மரக்குற்றிகளை அங்கிருந்து எடுத்துச் செல்லும்படி கூறினார். கோணேசப் பெருமானின் பெருமையை நன்குணர்ந்த ஒரு பெரியவராகக் காணப்பட்ட அத்தகையோனுக்கு என் சிறப்பான நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

"அன்பு எங்கிருக்கின்றதோ அங்கு தான் இறைவன் குடி கொண்டிருப்பான்" என நம் முன்னோர் கூறுவர். அது போன்று அன்புக்கு ஏங்கித் தவிக்கும் அபலைச் சிறார்களுக்கு நேசக்கரம் நீட்டி அன்பினாலும் அரவணைப்பினாலும் அவர்களின் துன்பங்களைக் கூடுமானவரை குறைத்து அவர்களுக்கு அருந் தொண்டு ஆற்றிவரும் 'அன்பு இல்லம்' சுந்தரலிங்கம் ஐயா அவர்கள் இம்மணிக்கோபுரம் அமைக்கும் பணியில் எனக்கு ஊக்கம் தந்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


மணிக்கோபுர மாடத்தில் கண்டாமணியைப் பொருத்துவதற்கு, நான் சிரமப்பட்ட வேளையில் தனது சிரத்தைப் பாராமல் தனது தொழில்நுட்ப அறிவையும் உடல் உழைப்பையும் தந்து என்னுடைய சிரமத்தை தனதாக்கி எனக்கு உதவியமைக்காக மிற்சுயி சீமெந்து நிறுவனத்தின் பொறியியல் முகாமையாளர் திரு. ஏ. குகப்பிரியாவிற்கு என்னுடைய அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


மணிக்கோபுர மலரைத் தயாரிக்கும் பொருட்டு அதற்கான உதவிகளை உவர்மலை திரு. நா. கணபதிப்பிள்ளையிடம் கேட்டபோது அவர் மனமுவந்து தன்னாலான உதவிகளைச் செய்து தருவதாக உறுதி கூறி இம்மலர் இத்துணை சிறப்பாக அமைய தனது திறமையையும் நேரத்தையும் எனக்காகச் செலவிட்டமைக்காக எனது தனிப்பட்ட பண்பான நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

கண்டாமணியை கோபுரத்தில் தாங்கி நிற்பதற்கான இரும்பிலான தாங்கிகளை மிகவும் துல்லியமாகவும், உறுதியாகவும் செய்து தந்து அவ்வப்போது நான் கூப்பிட்ட போதெல்லாம் என்னுடன் கோயிலுக்கு வந்து தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கிய சிவம் மோட்டர்ஸ் உரிமையாளர் அவர்கட்கும் எனது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மணிக்கோபுர திருப்பணிகளின் போது தேனீர், சிற்றுண்டிகள் போன்ற சகல உதவிகளையும் செய்து ஒத்துழைப்பு வழங்கிய ஆலய பூசகர் சி. குகானந்தக் குருக்கள் ஐயாவுக்கும் அவரது குடுபத்தவர்க்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தனை சிறப்பாக கட்டிமுடிக்கப்பட்ட கண்டா மணிக்கோபுரத்திற்கு ஆசியுரைகள் வழங்கிய எல்லாப் பெரியார்களுக்கும், வாழ்த்துரைகள் வழங்கிய எல்லாப் பெருமக்களுக்கும், கும்பாபிஷேக அழைப்பிதழை மிக அழகாகவும் நேர்த்தியாகவும் மிகக் குறுகிய நேரத்தில் அச்சடித்து வழங்கிய கோணேஸ்வரா அச்சக உரிமையாளர் சிவஸ்ரீ S. சோமாஸ்கந்த சர்மா அவர்கட்கும், ஆரம்பம் முதல் அதன் கும்பாபிஷேகம் வரை உதவிகள் செய்த என்னுடைய எல்லா நண்பர்களுக்கும், தொழில்நுட்ப உதவிகளை வழங்கியவர்களுக்கும், வாகன வசதிகளைத் தந்துதவியவர்களுக்கும், மற்றும் இலங்கை பொலிஸ், இராணுவ வீரர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரு சில தடங்கல்கள் ஏற்பட்ட போதும் கோணேசரின் கருணைப் பார்வையினால் அவைகள் நிவர்த்தி பெற்று எல்லாம் நலமுடன் முற்றுப்பெறச் செய்த கோணேநாதரை சிரம்தாழ்த்தி வணங்குகின்றேன்.






சிவதொண்டன் கணேஸ் கீர்த்திதாஸ்
கண்டாமணிக் கோபுர, கும்பாபிஷேக உபயகாரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
189672

இம் மலருக்காக வழங்கப்பட்ட சில ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கட்டுரைகள், புகைப்படங்கள் போன்றவை எங்களிடம் கையளிக்கப்படாத காரணத்தினால் அவைகள் இம் மலரில் பிரசுரிக்க முடியவில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



JAFFNA

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA * LIBRARY *
University of Jaffna
189672
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Printed by Unie Arts (Pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org